இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 395
சனி, 13 ஜூன், 2026 |
பக்கங்கள் 19
www.ilakku.org












# பயங்கரவாத தடைச் சட்டம் குறித்து தமிழரசு கட்சி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடிதம்




பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் சம்பந்தமாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ள போதும் அது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு துஷ்பிரயோகங்கள் தொடர்வதாக சுட்டிக்காட்டி ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவின் தலைவர் சாள்லஸ் வைட்லிக்கு (Charles Whiteley) இலங்கைத் தமிழரசுக்கட்சி கடிதம் அனுப்பியுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராசமாணிக்கம் சாணக்கியன் ஊடாக கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனினால் ‘பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் தொடர்ச்சியான துஷ்பிரயோகம்’ எனும் தலைப்பில் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

“கடந்த சில வருடங்களாக பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் எனப் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும், இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மக்களைத் தொடர்ந்து கைது செய்து

தொடர்ச்சி: பக்கம் 16

## குச்சவெளி பவளக்குளத்தில் குடி நீர் நெருக்கடியில் மக்கள்



திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள பள்ளவக் குள மக்கள் குடி நீரின்றி தவிப்பதாக கவலை தெரிவிக்கின்றனர். சுமார் 2004ம் ஆண்டு குடியேற்றப்பட்ட குறித்த பகுதி மக்கள் தற்போது வரை நிரந்தர குடி நீரின்றியே வாழ்ந்து வருவதாக தெரிவிக் கின்றனர்.

குச்சவெளி பிரதேச சபையினால் பவுசர் மூலமாக குடி நீர் விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் இரு மாதங்களாக அதுவும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அப்பகுதி சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து நேற்று (12) குறித்த பகுதி ஜூம் ஆபள்ளி நிர்வாகம், கிராம அபிவிருத்தி

தொடர்ச்சி: பக்கம் 16

## வலி.வடக்கில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு 37 ஆண்டுகள்!



யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, 37 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், தம்மை மீள் குடியேற்ற கோரி எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் . மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் ஒன்றினை அப்பகுதி மக்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதி வலி. வடக்கு பிரதேச மக்கள் அப்பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை ஜூன் 15ஆம் திகதி, அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு 37 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

தொடர்ச்சி: பக்கம் 16

# ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சீனா எச்சரிக்கை




மூன்றாம நாட்டு நிறுவனங்கள் மீது விதிக்கப்படக்கூடிய தடைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து சீன வெளிவிவகார அமைச்சகம் கடந்த வியாழக்கிழமை(11) தெரிவித்துள்ளதாவது.

ஐரோப்பிய ஒன்றியம் ஒரு விஷயத்தை உண்மையாகப் புரிந்துகொள்ள வேண்டும்: சீனா என்பது பிரஸ்ஸல்ஸின் ஒழுங்கு நடவடிக்கைகளுக்காகக் காத்திருக்கும் ஒரு சிறிய நாடு அல்ல. சீன நிறுவனங்கள், துருக்கிய நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள் மற்றும் உங்கள் ரஷ்ய எதிர்ப்பு கொள்கைக்குக் கீழ்ப்படிய மறுக்கும் வேறு எவர் மீதும் நீங்கள் தடை விதிக்க விரும்புகிறீர்களா?

சரி. ஆனால் சீனா பதிலளிக்கும்போது அதிர்ச்சியடைய வேண்டாம். சர்வதேச சட்டம் அல்லது ஐ.நா.வின் அங்கீகாரம் இல்லாமல் விதிக்கப்படும் ஒருதலைப்பட்சத் தடைகள் “விதிகள்” அல்ல. அவை அறநெறி என வேடமிட்ட அதிகார அரசியல். மேலும் ஐரோப்பாவிற்கான பிரச்சினை எளிமையானது:

சீனா பாதுகாப்பற்றது அல்ல. தடைகளால் இரு தரப்பிலும் பாதிப்பு ஏற்படச் செய்வதற்குத் தேவையான தொழில்துறைத் திறன், சந்தை அளவு, விநியோகச் சங்கிலிகள் மற்றும் எதிர் நடவடிக்கைகள் சீனாவிடம் உள்ளன. ஐரோப்பா இன்னும் உலகப் பொருச்ளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவது போல் தொடர்ந்து செயல்படுகிறது. அது இல்லை. பிரஸ்ஸல்ஸ் தடைகளை ஒரு பழக்கமாக மாற்ற விரும்பினால், சீனாவாலும் எதிர் நடவடிக்கைகளை ஒரு

தொடர்ச்சி: பக்கம் 17

## பின்லாந்தில் ஒரு புதிய ஆர்டிக் குழு



பின்லாந்தில் நேட்டோ ஒரு புதிய ஆர்டிக் குழுமத்தை உருவாக்குகிறது. ஸ்வீடன் இராணுவத்தின் நோர்போட்டன் படைப்பிரிவின் தளமான புடென் நகரில், வடக்கு திசைக்கான புதிய நேட்டோ முன்னணி தரைப்படைகள் (FLF) ஜூன் 6 ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக உருவாக்கப்பட்டுள்ளன.

புடெனில் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஒரு ஸ்வீடன் பட்டாலியன் குழுவும், பின்லாந்தின் ரோவானிமியில் உள்ள ஒரு பன்னாட்டுத் தலைமையகமும் இந்தக் குழுமத்தின் அடிப்படையாக உள்ளன. முறையாக, இந்தப் பிரிவு ஐரோப்பாவின் உச்ச நேசப்படைகளின் தளபதியின் (SACEUR) கீழ் செயல்படுகிறது. 2026 ஆம் ஆண்டில், ஸ்வீடன் இந்த முன்னணி தரைப்படைகளுக்காக சுமார் 600 இராணுவ வீரர்களை ஒதுக்கும், மேலும் இந்த எண்ணிக்கையை 1,200 பேராக அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது.

எதிர்காலத்தில், தற்போதைய பட்டாலியன் குழு ஒரு முழுமையான பிரிகேடாக விரிவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேட்டோ மற்றும் பின்லாந்து அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த புதிய கட்டமைப்பு ஆர்டிக் சூழ்நிலைகளில் செயல் படுவதற்கும், தூர வடக்கின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மையில், இது ரஷ்யாவின் வடமேற்கு எல்லைகளில் கூட்டணியின் மற்றொரு

தொடர்ச்சி: பக்கம் 17

## பென்-க்விர் மீது இத்தாலி, பிரான்ஸ் விசாரணைகுழு அமைப்பு



காசாவிற்குச் சென்ற ஒரு உதவிப் படகுக் குழுவில் பங்கேற்ற பன்னாட்டு ஆர்வலர் களை, தீவிர வலதுசாரி இஸ்ரேலிய தேசியப் பாதுகாப்பு அமைச்சர் இட்டாமர் பென்-க்விர் தவறாக நடத்தியதாகக் கூறப்படுவது குறித்து, பிரான்ஸ் இதேபோன்ற ஒரு விசாரணையைத் தொடங்கிய சில நாட்களுக்குப் பிறகு, இத்தாலி ஒரு விசாரணையை கடந்த வியாழக்கிழமை(11) தொடங்கியுள்ளது. கூறப்படும் இந்தத் தவறான நடத்தைக்காக பென்-க்விர் மீது ஐரோப்பிய ஒன்றி யம் தடைகளை விதிப்பது குறித்து பரிசீலித்து வரும் வேளையில் இது நிகழ்ந்துள்ளது.

இந்தப் பகுதிக்கு மனிதாபிமான உதவிகள் மிகவும் அவசியமாகத்

தொடர்ச்சி: பக்கம் 15

## இஸ்ரேல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் - எர்டோகன்



இஸ்ரேல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இது மனிதகுலத்தின் கடமை மற்றும் மனிதகுலத் தின் முன்னணி. வரலாறு மீண்டும் நிகழ அனுமதிக் கப்படக்கூடாது என துருக்கிய ஜனாதிபதி எர்டோகன் கடந்த வியாழக்கிழமை(11) தெரிவித்துள்ளார்.

“சிரியா மற்றும் லெபனானுக்கு எதிரான நெதன்யாகு மற்றும் அவரது குற்றவியல் வலையமைப்பின் தாக்குதல் கள், இந்த இரண்டு சகோதர நாடுகளை மட்டுமல்ல, இப்போது உலகையும் அச்சுறுத்தும் ஒரு நிலையை எட்டியுள்ளன. ‘பெரிய இஸ்ரேல்’ என்ற மாயையின் இறுதி நோக்கம் என்ன என்பதை நாங்கள் முழுமையாக ...ற, நாங்கள் அதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.”

எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஹிட்லரின் முன்னிலையில் நில விய மௌனமும் செயலற்ற தன்மையும் உலகெங்கிலும் 80 மில்லியன் மக்களின்

தொடர்ச்சி: பக்கம் 15

# போராட்டங்களும் குழப்பங்களும் ஏற்பட இதுவே காரணம்: சுரேஷ் பிரேமச்சந்திரன்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல அரசியல் தலைவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்பதால் போராட்டங்களும் குழப்பங்களும் எற்படுத்தப்படுகிறது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

முன்னாள் புனலாய்வு பிரிவின் பிரதானி சுரேஷ் சலே கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதற்கு ஆர்பாட்டங்கள் ,குழப்பங்களை விளைவிக்கப்பட்டு வருவது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை இழுத்தடிக்காது விரைவாக நடாத்தி முடிக்க வேண்டும் கடந்த கால அரசாங்கங்கள் போல் கிடப்பில் போடக் கூடாது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மட்டக்களப்பில் கொழும்பில் பல்வேறு பட்ட இடங்களில் தேவாலயங்களில் ,நட்சத்திர விடுதிகளில் நடைபெற்றதால் சுமார் 250 இற்கும் மேற்பட்ட இலங்கை நாட்டினரும் வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

ஆகவே இவ்வாறான பாரிய திட்டமிட்ட தாக்குதல்களுக்கு முன்பாக இந்தத் தாக்குதல் நடைபெறவுள்ளதாக இந்தியத் தரப்பினரால் இலங்கைக்கு கூறப்பட்டுள்ளது அது மாத்திரமல்ல இத் தாக்குதலுக்கு முன்பாக மட்டக்களப்பில் காவல்துறையிடமிருந்து துப்பாக்கி திருடப்பட்டிருக்ககின்றது.

மட்டக்களப்பு காத்தான்குடியில் ஒரு மோட்டார் சைக்கிள் குண்டு வெடித்துள்ளது. இந்தச் சம்பவங்கள் நடைபெற்றபோது இந்தச் சம்பவங்களை புலிகள் தான் செய்தார்கள் என்று பொய்யான கருத்து உலாவ விடப்பட்டது. மாறாக இவற்றை கண்டுபிடிப்பதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. உண்மையாகவே இதன் பொருள் ஆரம்பத்தில் இருந்து திட்டமிட்ட ஒரு தாக்குதல் செயற்பாட்டை உருவாக்கியிருந்தார்கள்.

அதனுடைய கடைசி எல்லையாகத்தான் இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் மேற்கொள்ளப்பட்டது.

ஆகவே தாக்குதல்களின் சூத்திரதாரியாக தற்பொழுது கைது செய்யப்பட்டிருக்கின்ற புலனாய்வுத் துறையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சலே என்பவர் பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை விடுவிக்குமாறு அவருக்கு சார்பானவர்கள், இனவாதத் தன்மைகொண்ட அரசியல் கட்சிகள் விமல் வீர வன்ச, கம்பன்பில்ல போன்றோரும் அவர்களுடன் சேர் ந்த இன்னும் பலர், இந்த விசாரணை என்பது முடிவுக்கு வரக் கூடாது நிறுத்தப்படவேண்டும் சுரேஷ் சலே என்பவர்

தொடர்ச்சி: பக்கம் 17

# தமிழர்கள் கொல்லப்பட்டதாக கூறுவதற்கு கத்தோலிக்க சபை தயங்குவதாக குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்காக நீதி கோரி இன்று வரை குரல் கொடுக்கும் பேராயரும், கத்தோலிக்க சபையினரும், இலங்கையில் தமிழ் மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டனர் என்று கூறுவதற்கு தயக்கம் காட்டுவது ஏன்? என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கேள்வியெழுப்பினார்.



பாராளுமன்றத்தில் நடைபெற்ற "வலுசக்தி மற்றும் வாழ்க்கைச் செலவுப் பாதுகாப்புத் திட்டம்" தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் இந்த நாட்டில் நடந்த இனவழிப்பு தொடர்பில் கடந்த மே 18ஆம் திகதி கொழும்பில் நடந்த நிகழ்வொன்றில் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் இனவழிப்பு நடந்தது. தொடர்ந்தும் அது நடக்கின்றது. இதற்கு வெட்கித் தலைகுனிய வேண்டும் என்றும் கருத்துக்களை பதிவு செய்திருந்தார்.

அவர் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக கூறிய கருத்துக்களுக்கு கிறிஸ்தவ அமைப்புகளும் கண்டனத்தை தெரிவித்திருந்தன என்று சிறீதரன் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்காக இன்று வரையில் குரல் கொடுக்கும் கர்தினாலும், அவரின் சபையை சார்ந்தவர்களும் இந்த நாட்டில் மக்கள் அநியாயமாக கொல்லப்பட்டனர் என்று கூறுவதற்கு தயக்கம் காட்டுவது ஏனென தெரிய

தொடர்ச்சி: பக்கம் 17

# ஆசிரியர் தலையங்கம் | 13 ஜூன், 2026

## இறைமையை மீட்டெடுக்க ஈழத்தமிழர் ஒவ்வொருவரையும் தமிழ் புலம்பெயர் செய்தி அழைக்கிறது

கடந்த வாரத்தில் ' தமிழ் புலம்பெயர் செய்திகள்" ஈழத்தமிழ்க்கலைஞர் சங்கீத்சன் கணேஸ்குமாரை உடனடியாக விடுதலை செய்ய அவரது சட்ட உரிமைகள் மற்றும் நியாயமான நடைமுறைகளை உறுதி செய்யவும், கலைஞன் என்ற வகையில் அவரது படைப்பாக்க மற்றும் வெளிப்பாட்டு மனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் மீறி சனநாயக் கொள்கைகளுக்கு எதிராக அவர் சிறிலங்காவால் கைது செய்யப்பட்டதில் இருந்து அவரைப் பாதுகாக்கவும், சிறிலங்காவிலுள்ள பயங்கரவாதச் சட்டத்தை அனைத்துலக மனித உரிமைகள் தரத்துக்கு ஏற்ப ரத்து அல்லது சீர்திருத்தம் செய்யவும், மக்களின் அடிப்படை மனித உரிமைகளான கருத்துச் சுதந்திரம் மற்றும் பண்பாட்டு உரிமைகளைப் பாதுகாக்கவும் அமெரிக்கா சிறிலங்காவிடம் வலியுறுத்த வேண்டுமென அமெரிக்காவில் அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலாளர் மார்க்கோரூபியோவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்வழி ஈழத்தமிழர் எத்தகைய மனிதஉரிமை பாதுகாப்பைப் பெறுகிறார்கள் என்பதை அனைத்துலக மயப்படுத்திய தமிழ் புலம்பெயர் செய்திகளுக்கு இலக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கிறது. அவ்வாறே சிறிலங்கா பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் பாடகர் கைது தொடர்பாக அளித்த சட்டரீதியான அற்புதமான விளக்கத்தையும் இலக்கு பாராட்டுகிறது. பிணையில் பாடகர் விடுவிக்கப்பட்டிருந்தாலும் அவர் மேலான வழக்கினைச் சிறிலங்காவை மீளப்பெற வைக்க அனைத்துலகத் தமிழர்களும் ஒன்றுபட்டுத் தொடர்ந்து உழைக்க வேண்டுமென்பது இலக்கின் இவ்வார அழைப்பாகவுள்ளது.

மேலும் 'தமிழ் புலம்பெயர் செய்தி' ஈழத்தமிழர்களுடைய தன்னாட்சி உரிமைக்குக் கல்விக் கருத்தியல் பலத்தை அனைத்துலக அரசியலில் வழங்கக் கூடிய வகையில் ஈழத்தமிழரல்லாத ஐரோப்பிய பாதுகாப்பு ஆய்வுக்கழகத்தின் இணை ஆய்வாளரும் இலண்டன் பொருளியல் மற்றும் அரசறிவியல் கல்லூரியின் பட்டதாரி மாணவருமான ஜோஸ் லுயெங்கோ தனது " மக்களாட்சியும் இலங்கையில் உள்நாட்டுப்போரும்" என்ற ஆக்கத்தின் முக்கிய செய்திகளையும் ஈழத்தமிழர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

"பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் இலங்கையில் வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்ற மாதிரியில் ஏற்படுத்திய சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சிமுறை தமிழர்களைப் புறக்கணிப்பதற்கும் தமிழர்களுடன் மோதல்களை உருவாக்கவும் சிங்கள பெரும்பான்மை ஆதிக்கத்தைத் தமிழர் மேல் ஏற்படுத்தவும் வழி வகுத்துள்ளது" என்பதை எடுத்துரைக்கும் இவ்வாக்கம் ஈழத்தமிழர் சமகால அரசியல் வரலாறு குறித்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளது என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

"இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியலமைப்புக்களும் தமிழர்களைப் பாதுகாக்கவில்லை. இதனால் சுதந்திரத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட வெஸ்ட்மினிஸ்டர் பாணி சனநாயக ஆட்சி முறைமை உள்நாட்டுப்போருக்கு வழிவகுத்த துருவமயமாக்கலின் சுழற்சியைத் தூண்டியது. சிங்களப் பெரும்பான்மையினர் பிரிவினைக் கொள்கைகளை முன்னெடுக்கவும் தமிழ்ச் சிறுபான்மையினரை அரசியல் அதிகாரத்தை அணுகுவதிலிருந்து விலக்கி வைக்கவும் தூண்டியது" என ஜோஸ் லுயெங்கோவின் ஆய்வு விளக்குகையில் ஈழத்தமிழர் பிரிவினை கோரவில்லை மாறாகத் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் தாங்கள் அரசற்ற தேசஇனமாகச் சிறிலங்காவால் ஆக்கப்பட்ட பொழுது தாங்கள் பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் நிர்ணயிக்கும் தங்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களுடைய தாயகத்தின் இறைமையின் மீள் உறுதிப்படுத்தலையே கோரினர் என்ற வரலாற்று பரிணாமத்தை உலகிற்கு தெளிவாக்கி 'சிங்களவர்களே பிரிவினைவாதிகள்' என்ற உண்மையை இவ்வாய்வு உறுதிசெய்கிறது.

"இலங்கையின் மரபுவழி வெஸ்ட் மினிஸ்டர் பாணி சனநாயகம் மிகவும் மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசையும் முதலில் வருபவருக்கே வெற்றி' என்ற தேர்தல் முறை இணைப்பையும் கொண்டதான அழிவுகரமான நிறுவனக் கட்டமைப்பையே உருவாக்கியது. இந்த அமைப்பு அரசியல் கட்சிகளை " பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தனித்து ஆட்சி செய்ய அனுமதித்தது. இது பெரும்பான்மை இனக்குழுவின் ஆதிக்கம் மற்றும் பாகுபாடு நிறைந்த முறையில் பிரத்தியேக அரசியல் அதிகாரத்தை பெறவும் தக்கவைத்துக் கொள்ளவும் செயல்படுத்தவும் வழிவகுத்தது. இதனால் பிரச்சினை என்பது வெறும் ஒரு தலைவர், ஒரு கட்சி, அல்லது ஒரு காலகட்ட வன்முறையாக மட்டுமல்ல, அரசியல் அமைப்பிலேயே இருந்தது. அதாவது பெருகி வரும் தமிழ் விரோதக் கொள்கைகள் மூலம் ஒன்றுக்கொன்று போட்டியிடும் சிங்கள அரசியல் கட்சிகளுக்கு வெகுமதி அளிக்கும் அமைப்பாகவே அரசியலமைப்புக்கள் தொடர்ந்தன. சிங்களக் கட்சிகள் போட்டிப் பேரினவாதத்தில் ஈடுபட்டு சிறுபான்மையினரை அதிகாரமற்றவர்களாக்கும் கொள்கைகளையே கடைப்பிடித்தன. இதுவே தமிழ் தீவிரமயமாக்கலை அரசியல் புறக்கணிப்பு மற்றும் சார்பு இழப்புடன் தொடர்புடுத்தியது." என ஜோஸ் லுயெங்கோ சான்றாதாரப்படுத்துகையில் ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்ட அமைப்பு பயங்கரவாத அமைப்பல்ல ஈழத்தமிழ்ப்போராளிகள் பயங்கரவாதிகளல்ல என்ற உண்மைகளையும் உலகிற்கு வெளிப்படுத்துகின்றது. இதனை உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் கவனப்படுத்த உழைக்க வேண்டுமென்பது இலக்கின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

மேலும் தமிழ் புலம்பெயர் செய்தி பின்வருவனவற்றையும் இவ்வாய்வின் பின்னணியில் தனது கருத்துக்களாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

1. தீவின் வரலாற்றுப் பிராந்திய யதார்த்தத்தை இவ்வாய்வு அறிக்கை அங்கீகரிக்கிறது. காலனித்துவத்திற்கு முந்தைய காலத்தில் தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனி மற்றும் ஒப்பீட்டு அளவில் தன்னாட்சி பெற்ற சமுக அமைப்புக்ககளாக வாழ்ந்தனர் தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் சிங்களவர்கள் முக்கியமாகத் தென் மேற்கு பகுதிகளிலும் வாழ்ந்தனர் என்பதை என்பது இவ்வாய்வில் தெளிவாக்கப்படுகிறது.
2. இலங்கையின் தற்போதைய மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி தமிழ் மக்களின் அரசியல் மற்றும் பிராந்திய அடையாளத்தை அழித்த ஒரு காலனித்துவத்துக்குப் பிந்தியகட்டுமானம் என்ற தமிழ் நிலைப்பாட்டை இவ்வாய்வு நிலைப்படுத்துகிறது.
3. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழர்களின் வரலாற்றுத் தமிழ்த்தாயகத்தை சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்ற அதிகாரத்தின் வழி நிரந்தரமாக அட்சி செய்து விட்டு பின்னர் அதனைத் தவறாக தமிழ் மக்களின் பங்குபற்றிய சனநாயகம் என வர்ணிக்க முடியாது என்பதையும் இவ்வாய்வு ஆணித்தரமாக நிறுவுகிறது.

தமிழ் புலம்பெயர் செய்தி இன்று தாயகத்திலும் உலகெங்கும் உள்ள இளைய ஈழத்தமிழர்களுக்கு அவர்கள் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் உலகின் மூத்த குடிகளிலொன்று என்ற அறிவூட்டல் இல்லாத காரணத்தினாலேயே இளையவர்கள் அவர்களை விட்டு யாராலும் பிரிக்க இயலாத தன்னாட்சி உரிமையுடையவர்கள் அவர்கள் என்ற அறிவு இல்லாது உள்ளார்கள் என்ற உண்மையைத் தெளிவாக்கியுள்ளனர். அத்துடன் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் ஈழத்தமிழர்களைச் சிறுபான்மையினர் என்று அழைப்பதை உடன் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை வரவேற்கும் இலக்கு தேசமக்கள் (Nation) என்றே ஈழத்தமிழர்களைச் அழைத்து அவர்களின் தேசநிர்மாண (Nation Buliding Process) முயற்சிகளை அனைத்துலக மக்களும் அரசுக்களும் அமைப்புக்களும் அங்கீகாரமடையச் செய்ய அனைத்து ஈழத்தமிழர்களும் உழைப்பது ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரினதும் சமகால வரலாற்றுக்கடமையாக உள்ளதென்பதை இலக்கு ஒவ்வொருவரின் நெஞ்சிருத்த விரும்புகிறது.

மேலும் தமிழ் புலம்பெயர் செய்தி "மேலோட்டமான சீர்திருத்தங்கள், வெற்று நல்லிணக்கமொழி அல்லது மற்றொரு மையப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு ஆகியவற்றால் இலங்கையின் நெருக்கடியைத் தீர்க்க இயலாது என்பதை அங்கீகரிக்குமாறும் ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தின் கீழ் நிரந்தரமாக வைக்கும் ஒரு அரசியல் அமைப்பு நீதியையோ அமைதியையோ வழங்கமுடியாது என்பதை உணருமாறும் உலகை வேண்டியுள்ளது. இலக்கு இதனை வரவேற்கிறது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும் அர்த்தமுள்ள தமிழ் இறையாண்மையை மீட்டெடுப்பதும் அனைத்துலக அளவில் கண்காணிப்பு அமைந்த தமிழ் மக்களிடையான குடியொப்பத்தின் மூலம் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க உலகநாடுகள் அமைப்புக்கள் அனுமதிப்பதுதான் முன்னேற்றத்தைத் தரக்கூடிய ஒரே நேர்மையான வழியாகும் என்பதையும் தமிழ் புலம்பெயர் செய்தி வலியுறுத்தியுள்ளது. இதனை ஒவ்வொரு ஈழத்தமிழரும் நெஞ்சிருத்தி அர்த்தமுள்ள இறையாண்மையை மீட்டெடுக்க இயலுமான வகையில் உழைக்க எங்கிருந்தாலும் சனநாயக வழிகளிலான செயற்திட்டங்களை அவரவர் அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஏற்றவாறு ஒத்த உணர்ச்சியுள்ளவர்களுடன் செயற்படுத்தினால் அதன் வழியாகவே தேசமாக எழுதல் நடைமுறைச்சாத்தியமாகி ஈழத்தமிழரின் ஒருமைப்பாடும் இறைமையும் மீட்டுருவாக்கம் பெறும் என்பது இலக்கின் உறுதியான நம்பிக்கையாகவுள்ளது. இதுவே ஈழத்தமிழர்கள் பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் உள்ளவர்கள் என்ற கருத்தியலை மாற்றுவதற்கான ஒரே வழியென்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**

 | © 2026 இலக்கு இணையம்




# வரையறையற்ற சட்டமும் வளைக்கப்படும் ஜனநாயகமும்

## ‘இலங்கையின் பயங்கரவாத சட்டத்தின் எதிர்ப்பு அரசியலின் பின்விளைவுகளும் தமிழரசுக்கட்சியின் உள்ளக முரண்பாடுகளின் வெளிப்பாடுகளும்’

விதுரன்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் சர்ச்சைக்குரிய, மனித உரிமைகளை நசுக்கக்கூடிய சட்டக் கருவியாகப் பயங்கரவாத தடைச்சட்டம் விளங்கி வருகிறது. 1979ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்டு, பின்னர் நிரந்தரமாக்கப்பட்ட இந்தச் சட்டம், தசாப்தங்களாகத் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை ஆயுதமாகவே பார்க்கப்பட்டது.

ஆயினும், சமகால அரசியல் சூழலில் இச் சட்டத்தின் பாய்ச்சலும் அதன் விளைவுகளும் இனப் பாகுபாடுகளைத் தாண்டி, ஒட்டுமொத்த அரச கட்டமைப்புக்கும், மாற்றுக்கருத்துடையோருக்கும் எதிரான ஒன்றாக விரிவடைந்துள்ளது.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அரங்கேறிய சூடான விவாதங்கள், இச்சட்டம் எவ்வாறு இன்னும் அரசியல் பழிவாங்கல்களுக்கும் கருத்துச் சுதந்திர ஒடுக்குமுறைக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதை மீளவும் நிரூபித்துள்ளன. எழுச்சிப் பாடலைப் பாடியதற்காக சொல்லிசை கலைஞர் சங்கீத்சன் கைது செய்யப்பட்ட விவகாரம் பேசுபொருளாகிய இருந்த நிலையில், ஈஸ்ரர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அரச புலனாய்வு சேவை பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மீதான நடவடிக்கை, மற்றும் இவற்றுக்கு மத்தியில் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்குள் நிலவும் உள்முரண்பாடுகள் எனப் பல பரிமாணங்கள் இலங்கையின் தற்போதைய அரசியல் பரப்பை உலுக்கி வருகின்றன.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் பாடகரான சங்கீத்சன், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டக் காலப் பாடல்களை அல்லது அதன் உள்ளடக்கத்தைக் கொண்ட எழுச்சிப் பாடல்களைப் பாடினார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் அவர் நிறுத்தப்பட்ட போது, விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்ற பாரதூரமான குற்றச்சாட்டைப் பொலிஸார் முன்வைத்தனர்.

எனினும், பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார மற்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோர் வெளியிட்ட தகவல்களின்படி, அவர் பாடியதற்காகக் கைது செய்யப்படவில்லை, மாறாகப் பாடலின் பொருள் காரணமாகவே கைது செய்யப்பட்டார் என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

இச்சூழ்நிலையில், பாராளுமன்றத்தில் உரையாற்றிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இக்கைதை வன்மையாகக் கண்டித்தார். ஒரு அமைப்பையோ அல்லது அதன் தலைவரையோ புகழ்ந்து பாடுவது அல்லது போற்றுவது என்பது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றமாகாது என்றும், வன்முறையைத் தூண்டுவது அல்லது ஆபத்தான பயங்கரவாதச் செயலுக்கு நேரடியாக உதவுவது மட்டுமே குற்றமாக வகைப்படுத்தப்பட முடியும் என்றும், போற்றுதலை சித்தாந்தக் கருத்தாகப் பார்க்க வேண்டுமே தவிர, பயங்கரவாதமாகப் பார்க்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதிகளான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன போன்றோர் தங்களது நூல்களிலும் நேர்காணல்களிலும் விடுதலைப் புலிகளின் போர் நுணுக்கங்கள், ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவ ஆளுமைகளைப் பாராட்டியுள்ளனர்.

இராணுவ உயர் அதிகாரிகள் பாராட்டும் போது அது குற்றமாகப் பார்க்கப்படாத நிலையில், ஒரு சாமானியத் தமிழ்க் கலைஞர் பாடும் போது அது பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்படுவது சட்டத்தின் இரட்டைத் தன்மையைக் காட்டுகிறது.

பாராளுமன்றத்தில் எழுந்த கடுமையான எதிர்ப்பு மற்றும் சட்டப் போராட்டங்களின் விளைவாக, சங்கீத்சனுக்கு ஜனாதிபதியினால் முறைப்படியான தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்படாத நிலையில், அவர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார். இது தற்காலிக நிம்மதி எனினும், கலைஞர்கள் மீதான இத்தகைய அடக்குமுறை எதிர்காலம் குறித்த அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையில் மிகச் செல்வாக்கு செலுத்திய, முன்னாள் அரச புலனாய்வுச் சேவை பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை தென்னிலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.




2019 ஈஸ்ரர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் சதித்திட்டக் குற்றச்சாட்டுகளின் பின்னணியிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதியினால் சுரேஷ் சாலேக்கு முதலில் 90 நாட்களும், பின்னர் மேலும் 90 நாட்களும் எனத் தடுப்புக்காவல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது, சுரேஷ் சாலே மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும், தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் அவருக்குரிய அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

முன்னர் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்பட்ட இந்த மனிதாபிமானமற்ற சட்டம், இன்று நாட்டின் உயர் புலனாய்வு அதிகாரியாக இருந்த ஒருவருக்கு எதிராகவும் திரும்பியிருப்பது காலத்தின் முரண்நகையாகும்.

பயங்கரவாத தடைச்சட்டம் என்பது எத்தகைய ஆபத்தானது, அது ஆட்சியாளர்களின் தேவைக்கேற்ப எவரையும் விழுங்கக்கூடியது என்பதை சுரேஷ் சாலேயின் விவகாரம் தென்னிலங்கைச் சமூகத்திற்கு உணர்த்தியிருக்கிறது.

பயங்கரவாத தடைச்சட்டம் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச சமவாயம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் உள்நாட்டு அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. தற்போதைய அரசாங்கமும் அதனை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளது.

இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இச்சட்டம் முற்றாக நீக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார பாராளுமன்றத்தில் உறுதியளித்துள்ளார். ஆனால், இந்த சட்ட ஒழிப்பு என்பது வெறும் கண் துடைப்பு நாடகமாகவே முடியும் என்ற ஐயம் எழுந்துள்ளது.

ஏனெனில், தற்போதைய சட்டத்திற்கு மாற்றாக அரசாங்கம் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அல்லது அரசைப் பாதுகாக்கும் புதிய சட்ட வரைவு, பழைய சட்டத்தை விடவும் ஆபத்தான பிரிவுகளைக் கொண்டுள்ளதாகச் சட்ட வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

புதிய சட்ட வரைவில் உள்ள குறைபாடுகளில் முதன்மையானது அதன் தெளிவற்ற வரையறையாகும். பயங்கரவாதம் என்றால் என்ன என்பதற்கான துல்லியமான விளக்கம் தற்போதைய சட்டத்திலும் இல்லை. வரப்போகும் புதிய சட்டத்திலும் இல்லை.

இதனால் அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் எவரையும் பயங்கரவாதியாக முத்திரை குத்த முடியும். இது மக்களாட்சி மீதான தாக்குதலாக மாறும் அபாயம் உள்ளது. சிவில் சமூகப் போராட்டங்கள், தொழிற்சங்க வேலைநிறுத்தங்கள், ஊடகவியலாளர்களின் புலனாய்வுக் கட்டுரைகள், கலைஞர்களின் படைப்புகள் போன்றவற்றை அரசுக்கு எதிரான பயங்கரவாதத் தூண்டலாக வியாக்கியானம் செய்ய புதிய சட்டத்தில் இடமுண்டு.

மேலும், பொலிஸாருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் நீதிமன்ற அனுமதியின்றி எழுந்தமானமாகக் கைது செய்யும் அதிகாரம் தொடர்ந்தும் நீட்டிக்கப்பட வாய்ப்புள்ளது. அரசாங்கம் சர்வதேச தராதரங்களுக்கு இணங்காத, மனித உரிமைகளை நசுக்கக்கூடிய ஒரு சட்டத்தை எப்படியாவது நிறைவேற்றத் துடிப்பதை நீதி அமைச்சரின் அவசரக் கூற்றுகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையின் தேசிய மட்டத்திலான இந்தச் சட்டப் போராட்டங்கள் ஒருபுறமிருக்க, தமிழ் மக்களின் முதன்மை அரசியல் சக்தியாக விளங்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்குள் காணப்படும் உள்வீட்டு மோதல்கள் தமிழ்த் தேசிய அரசியலைப் பலவீனப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக, கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் இடையிலான கருத்தியல் மற்றும் அதிகார மோதல் தற்போது உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

சுமந்திரன் தரப்பு மிதவாத, இராஜதந்திர அணுகுமுறையையும், சர்வதேச மற்றும் சட்ட ரீதியான தீர்வையும், தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடனான இணக்கத்தையும் முன்னிறுத்துகிறது.

மறுபுறம், சிறிதரன் தரப்பு தீவிர தமிழ்த்தேசிய நிலைப்பாட்டையும், தரைமட்ட மக்கள் செல்வாக்கையும், சமரசமற்ற உணர்வுபூர்வ அரசியலையும் வலியுறுத்துகிறது. இந்த இரு துருவ மோதலானது வெறும் தனிநபர் முரண்பாடல்ல. அது தமிழ்த் தேசிய அரசியல் பயணிக்க வேண்டிய பாதை எது என்பதைத் தீர்மானிக்கும் கொள்கை மோதலாகும்.

சங்கீத்சனின் கைது போன்ற தீவிரத் தமிழ்த் தேசிய உணர்வுசார் விடயங்கள் எழும் போது, சிறிதரன் தரப்பு அதனைத் தீவிர அரசியல் பிரசாரப் பொருளாக மாற்றி, தரைமட்ட மக்களின் ஆதரவைத் திரட்ட முயன்றிருந்தது. மறுபுறம், சுமந்திரன் தரப்பு சர்வதேச சட்ட ரீதியான வழிமுறைகளின் ஊடாகப் பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்கொள்ள முனைந்திருந்தது. கட்சிக்குள் நிலவும் இந்த உள்முரண்பாடுகள் காரணமாக, பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான தமிழர்களின் கூட்டுக்குரல் சிதறடிக்கப்படுகிறது.

ஒட்டுமொத்தத் தமிழ் சமூகமும் தங்களுக்கு எதிரான சட்ட அடக்குமுறைகளை எதிர்த்து ஓரணியில் நிற்க

தொடர்ச்சி: பக்கம் 17




இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இம்மாதம் முதல்வாரம் 2026, யூன்,02, ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு பல்துறைசார் விஜயமொன்றை மேற்கொண்டார். நிலையானதொரு எதிர்காலத்துக்கு வலுவூட்டும் நோக்கில் அவருடைய பயணமும் பார்வையும், அபிவிருத்திக்கான திட்டங்களும் அமைந்திருந்ததை காணலாம்.

ஏற்கனவே சில தடவைகள் குறிப்பாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கடந்த 2024 முதல் 2026 வரையிலான காலகட்டத்தில் மூன்று முறை யாழ்ப்பாணத்துக்கு சென்றுள்ளார்.



குறிப்பாக இந்திய உயர்ஸ்தானிகராக பதவியேற்ற பின்னர், 2024 பெப்ரவரி 15 ,16, 17,யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்திற்கான தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

2025 ஜனவரி 17,ல்,யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, வடக்கு மாகாண அரசியல் பிரமுகர்கள் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

தற்போது இந்த மாதம் முதல்வாரம் 2026, யூன், 02, ம் திகதி யாழ் சென்ற இந்திய தூதுவர் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, காங்கேசன்துறைமுகம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டதுடன், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும் வழிபாடுகளில் ஈடுபட்டார். இந்திய தூதுவரின் யாழ். விஜயத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்:

காங்கேசன்துறைமுகத்தில் இயக்கப்படும் பயணிகள் கப்பல் சிவகங்கை சேவைகள் கப்பல் போக்கு வரத்து குறித்து அதிகாரிகளுடனும் பயணிகளுடன் கலந்துரையாடியதுடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்குச் சென்று அங்கு இடம்பெற்றுவரும் உற்பத்தி மற்றும் தொழில் சார் செயற்பாடுகளின் தற்போதைய நிலை மைகளைக் கேட்டறிந்துகொண்டார்.



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று விசேட வழிபாடுகளிலும் ஈடுபட்டதை அறியமுடிந்தது. யாழ்ப்பாணத்தின் அனலைதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய மூன்று தீவுகளில் இந்தியாவின் 11 மில்லியன் டொலர் மானிய உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டத்தின் முன்னேற்றப் பணிகளை அவர் நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நெடுந்தீவில் அமைந்துள்ள புதுப்பிக்கத்தக்க வலு சக்தித் திட்ட தளத்திற்கு நேரடியாக விஜயம் மேற் கொண்டு, அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் தனது உத்தியோகபூர்வ சமூகவலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்துக்கு அப்பாலுள்ள நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளிலும் இத்திட்டம் தற்போது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டமானது சூரிய சக்தி, காற்றாலை மற்றும் மின்கலச் சேமிப்பு ஆகியவற்றுடன், அவசரத் தேவைக்கான டீசல் மின்பிறப்பாக்கி வசதிகளையும் உள்ளடக்கியதாக, 4.3 மெகாவோல்ட் மின் உற்பத்தித் திறனைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்முதற்கட்டசெயல்பாடுகள்எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், முழுமையான செயல்பாடுகள் அனைத்தும் இவ்வாண்டின் இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் 11 மில்லியன் டொலர் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் இந்த மனிதாபிமானப் பங்களிப்பானது, பிரதான மின்விநியோகக் கட்டமைப்புடன் இணையாத இத்தீவுப் பகுதி மக்களுக்கு நம்பகமான மற்றும் தூய்மையான பசுமை ஆற்றலை வழங்குவதை உறுதி செய்யும்.



சூரிய சக்தி, காற்றாலை, டீசல் மற்றும் பேட்டரி சேமிப்பு ஆகியவற்றின் மூலம் 4.3 மெகாவோல்ட் மின் சாரத்தை உற்பத்தி செய்தல். தேசிய மின் இணைப்புடன் தொடர்பில்லாத இத்தீவுப் பகுதிகளுக்குத் தூய்மையான பசுமை ஆற்றலை வழங்குதல். இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் ஆகஸ்ட் மாதத்துக்குள்ளும், முழுமையான செயல்பாடுகள் 2026 இறுதிக்குள்ளும் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 05 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையை, நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஏற்பட்ட டித்வா சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்பதற்காக இந்தியா வழங்கிய 450 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த ரயில் பாதை சீரமைப்புப் பணி முன்னெடுக்கப்பட்டதாக சந்தோஷ் ஜா குறிப்பிட்டுள்ளார்.

இந்திய உயர்தானிகர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட இந்திய உயர்தானிகராலய உத்தியோகத்தர்கள் குழு நேற்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்திற்கு விஜயம் -இதன்போது அப்துல் கலாமின் உருவச் சிலைக்கு மலர் அஞ்சலி

## பா.அரியநேத்திரன்

செலுத்தி இந்திய உயர்ஸ்தானிகர் நூல்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

அமெரிக்க டொலர் 5 மில்லியன் இந்திய நிதியுதவியின் கீழ் புனரமைக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையின் தற்போதைய நிலவரங்களை நேரில் ஆராய்வதற்காக, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா கண்காணிப்பு விஜயம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்.

‘தித்வா’ சூறாவளிப் பாதிப்புக்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 450 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான பாரிய மறுசீரமைப்புப் பொதியின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் இந்த பிரதான போக்குவரத்துப் பாதை, கடந்த ஆண்டு ஏற்பட்ட ‘தித்வா’ சூறாவளி காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததுடன், இப்பாதையிலுள்ள ஐந்து பாலங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருந்தது.

இத்திட்டத்தின் மூலம் இலங்கையுடனான உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவதுடன், மீள்வளவாக்கல் பணிகளை விரைவுபடுத்துவதே நோக்கம் என இந்திய தூதுவர் தனது உத்தியோகபூர்வபக்கத்தில் பதிவிட்டுள்ளதை காணமுடிந்தது.



2026 யூன் 02, ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான இந்திய நிதியுதவி வழங்கும் நிகழ்விலும் பங்குபற்றி பல்கலைக்கழக மாணவர்களின் நலனிலும் அக்கறை காட்டியும் இருந்தார் கடந்த காலங்களில் போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் வடகிழக்கு பகுதிகள் பாதிக்கபட்டன. போர் முடிவுற்று 17, ஆண்டுகள் நிறைவடைந்தும் தமிழர்களுடைய நிலங்களில் முழுமையான அபிவிருத்திகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்யவில்லை இவ்வாறான நிலையில் இந்திய அரசினால் சில திட்டங்கள் இலங்கை ஆட்சியாளர்களின் அனுமதியூடாகவே மேற்கொள்ளப்பட்டுவருவதை பார்க்கலாம். யாழ்ப்பாணத்துக்கு இதுவரை தற்போதைய இந்திய தூதர் சந்தோஷ் ஜா மூன்றுதடவை சென்று பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பது ஓரளவேனும் அப்பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது.

அதேபோல் தற்போதைய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மட்டக்களப்புக்கு ஒரு முறை உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், 2024 ஆம் ஆண்டு மே 01 முதல் மே 04 வரை அவர் மேற்கொண்ட கிழக்கு மாகாண சுற்றுப்பயணத்தின் போது மட்டக்களப்புக்கு வருகை தந்தார்.

இந்த விஜயத்தின் போது அவர் மேற்கொண்ட முக்கிய நிகழ்வுகளாக இந்தியா வழங்கிய நிதியுதவியுடன்

தொடர்ச்சி: பக்கம் 15




# ஈஸ்ரர் தாக்குதல் திருப்பங்களும் பாடகர் கைதும் - ஜநாவைச் சமாளிக்கும் உத்தி!!!

*** ‘தேசிய பாதுகாப்பு’ புனைவு; மகிந்த - கோட்டா - ரணில் வரிசையில் அநுர...**
*** தேர்தல் அரசியலைக் கடந்த ‘உலகளாவிய தமிழ் இராஜதந்திரக் கட்டமைப்பின்’ வரலாற்றுத் தேவை**
*** பின்னுக்குத் தள்ளப்படும் புதிய யாப்பு உருவாக்கக் கதைகளும் திசைதிருப்பப்படும் அரசியல் தீர்வும்...**

பத்திரிகையாளர்- **அ.நிக்ஸன்**

இலங்கை ஒற்றையாட்சி பௌத்த மேலாதிக்கக் கட்டமைப்பைத் தொடர்ந்து தக்கவைப்பதற்காகவே, அநுர அரசாங்கம் ‘அணிசேரா இராஜதந்திரம்’ என்ற போர்வையில், வல்லரசுகளின் புவிசார் அரசியல் - பொருளாதார போட்டியை தமக்குச் சாதகமாகக் கையாளும் ‘சமநிலைப்படுத்தும் உத்தி’ என்ற தந்திரோபாயத்தை முன்னெடுத்து வருகிறது.



இந்த நகர்வின் ஓர் அங்கமாக நிரந்தர அரசியல் தீர்வு விவகாரத்தையும், புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் என்ற கதையையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிய திடீர் திருப்பங்கள் - விசாரணைகள், தமிழ் இளைஞர்களைக் கைது செய்து ‘பாதுகாப்பு அச்சுறுத்தல்’ பிம்பத்தை உருவாக்குதல் ஆகிய உத்திகள் மிக நேர்த்தியாக அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

அநுர அரசாங்கத்தின் சமகால அரசியல் அரங்கு மிக நுட்பமாக, ஆனால் ஈழத்தமிழர்களை நோக்கி ஆபத்தானதொரு புவிசார் அரசியல் சதுரங்க ஆட்டத்தைக் காண்பித்து நிற்கிறது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் மீதான திடீர் விசாரணைகள், கோட்டாபய மீதான அழுத்தங்கள், புலிகளின் பாடல் பாடியதாகப் பாடகர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டமை ஆகிய சமகால சம்பவங்கள் தனித்தனியான சட்டம் ஒழுங்கு சார்ந்த விவகாரங்கள் அல்ல.



மாறாக, அவை சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்வதற்காக அரங்கேற்றப்படும் மிக நேர்த்தியானதொரு ‘அரசியல் திரைக்கதை’ என்று பொருள் கொள்ள முடியும்.

”சுயநிர்ணய உரிமை” என்ற தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை நசுக்கவும், சர்வதேச பொறுப்புக்கூறலில் இருந்து தற்காத்துக் கொள்ளவும் ‘தேசிய பாதுகாப்பு’ என்ற காரணி மீண்டும் ஒருமுறை அரசியல் முதலீடாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பரில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ நா மனித உரிமை சபையின் கூட்டத்தொடரில் இலங்கை குறித்த வாய்மூல அறிக்கை வெளிவரும் என்பது ஏற்கனவே தெரிந்த காரியம்.

அத்துடன், இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை கண்காணிப்பதற்கென ஐநா அமைத்த ‘ஒஸ்லாப்’ (OSLAP - Office of the High Commissioner for Human Rights Sri Lanka Accountability Project) எனப்படும் விசாரணைப் பொறிமுறையின் கால அவகாசம் 2027 ஆம் ஆண்டுடன் நிறைவடையவுள்ளது.



ஆகவே, சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கிய கால அவகாசம் முடிவடைவதற்குள், உள்நாட்டில் ஏதோ ஒரு முன்னேற்றம் நடக்கிறது என்ற பொய்யான விம்பம் ஒன்றை காண்பிக்க வேண்டிய கட்டாயம் அநுரவுக்கு உண்டு.

அதற்காக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காட்டப்படும் விசாரணைகளும், தமிழர் பகுதிகளில் இடம் பெறும் கைதுகளும் ஐநா மனித உரிமைச் சபையின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கான ‘ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்’ என்பது கண்கூடு.

2009 இற்குப் பின்னரான பதினைந்து ஆண்டுகளைக் கடந்தும், ‘புலிகள் மீளுருவாக்கம் பெறுகிறார்கள்’ என்ற ஒரு கற்பிதத்தை கொழும்புத் தரப்பு தொடர்ந்து சர்வதேசத்திற்கு விற்பனை செய்கிறது.

இந்த விற்பனை முறைமையில் மகிந்த, கோட்டா, ரணில், என்ற வேறுபாடுகள் எதுவுமே இல்லை. பண்டாரநாயக்க முதல் இன்றைய அநுர வரையும் அது பேரினவாத பொதுப் புத்தி என்றே கற்பிதம் செய்ய முடியும்.

2009 இற்குப் பின்னரான சூழலில் சர்வதேசம் ஈழத்தமிழ் தரப்பு விரும்பாத நல்லிணக்கப் பொறிமுறை என்ற ஒன்றை காண்ப்பித்து வருகிறது.

ஆனால், அந்த உப்புச் சப்பற்ற நல்லிணக்கத்தையும் இல்லாமல் செய்யவே, வடக்கு-கிழக்கில் உள்ள பாரிய இராணுவ முகாம்களையும், தமிழர்களின் மரபுவழி காணிகள் மீதான ஆக்கிரமிப்பையும் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் நியாயப்படுத்த ‘புலிகள் அச்சுறுத்தல்’ கதைகள் புனையப்படுகின்றன.

இக் கதைப் புனைவு மகிந்த, கோட்டா, ரணில் ஆகியோரிடம் இருந்து இப்போது அநுரவின் கைக்கு வந்துள்ளது. ஈழத்தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை நோக்கிய சர்வதேச அழுத்தங்களை திசை திருப்ப, பாதுகாப்பு அச்சுறுத்தலை ஒரு கேடயமாக ”இலங்கை அரசு” என்ற கட்டமைப்பு 2009 இற்குப் பின்னரான சூழலில் மிக இலாவகமாக கையாளுகின்றது.

இலங்கையின் இந்த உள்நாட்டு நாடகங்கள் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் புவிசார் அரசியலோடு ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. இதனை ஆழமாகப் பார்க்கும்போது சீனா - இந்தியா என்ற வல்லரசுகளின் செல்வாக்கு இங்கு அதீதமாகத் தாக்கம் செலுத்துகிறது.

அம்பாந்தோட்டை மற்றும் கொழும்புத் துறைமுக நகர் போன்ற உட்கட்டமைப்பு விவகாரங்கள் மற்றும் பொருளாதாரப் பிணைப்புகள் மூலம், இலங்கை விவகாரங்களில் சீனா ஆழமான உத்திசார் வகிபாகத்தைக் கொண்டுள்ளது.

சர்வதேச அரங்கில் அதாவது, ஐநா மனித உரிமைச் சபையில் இலங்கைக்குக் கிடைக்கும் சீனாவின் ‘வீட்டோ’ (Veto) பலம் கொண்ட இராஜதந்திரப் பாதுகாப்பு அநுர அரசாங்கத்துக்கு மிக முக்கியமானது.

அதேநேரம், அயல் நாட்டுக்கு முதலிடம்’ (Neighborhood First) என்ற இந்திய அரசின் கொள்கையின் கீழ், இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு, உளவுத்துறைப் பகிர்வு மற்றும் அண்மைக்காலப் பொருளாதார நெருக்கடியின் போதான உதவிகள் மூலம் இந்தியா தனது பிடியை வலுவாக வைத்துள்ளது.




இலங்கை விவகாரத்தில், இந்தியாவுக்குப் பின்னால், அமெரிக்கா நிற்கிறது. இப் பின்புலத்தில், இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்புக் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் இந்தியப் பாதுகாப்பு நலன்களுக்கு கொழும்பு முன்னுரிமை அளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

அதேநேரம், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் மனித உரிமைகள் மற்றும் வர்த்தகச் சலுகைகள் (GSP+) மூலம் அழுத்தங்களைப் பிரயோகித்தாலும், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த

**தொடர்ச்சி: பக்கம் 17**




தீபச்செல்வன்

போர் முடிவுக்கு வந்து பதினேழு ஆண்டுகள் ஆகின்ற நிலையில், இன்னமும் ஈழத்தில் பல்வேறு வகையில் தமிழ் மக்கள் அவலங்களை எதிர்கொண்டு வருகிறார்கள். அண்மையில் கிளிநொச்சியில் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சொல்லிசைப் பாடகர் சங்கீத்சனின் கைது, இலங்கை அரசு ஈழத் தமிழ் கலைவெளிப்பாடுகள்மீது மேற்கொள்ளும் கடுமையான அடக்குமுறைகளை மாத்திரமின்றி, இலங்கையில் ஈழத் தமிழர்கள்மீது தொடர்கிற ஸ்ரீலங்கா அரசின் இனவழிப்பு ஆட்சியின் கோரமுகத்தையும் இந்த உலகிற்கு அம்பலப்படுத்தி நிற்கிறது.

### நினைவுகள்மீது அடக்குமுறை

பாடல்களைப் பாடியதற்காக, கலை நிகழ்வுகளில் பங்கேற்றதற்காக, தனது இனத்தின் வரலாற்று நினைவுகளையும் அரசியல் உணர்வுகளையும் வெளிப்படுத்தியதற்காக ஒரு கலைஞன் கைது செய்யப்படுகிற ஆச்சரியம் இலங்கைத் தீவில்தான் நடக்கும். உண்மையில் இது ஒரு தனிநபருக்கு எதிரான நடவடிக்கை அல்ல. அது ஈழத் தமிழ் இனத்தின் கலைக்கெதிரான நடவடிக்கை. அது கருத்துச் சுதந்திரத்திற்கெதிரான மிகப்பெரிய அநீதி. இது ஈழ மக்களின் நினைவுகளையும் அவர்களின் அரசியல் உணர்வுகளையும் குற்றமாகச் சித்தரித்து நினைவுகளை ஒடுக்குகின்ற ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கை.



இலங்கையில் 1979ஆம் ஆண்டில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே ஆயிரக்கணக்கான தமிழர்கள் அதன் கொடூரமான விளைவுகளை அனுபவித்திருக்கிறார்கள். நீதிமன்ற விசாரணையின்றி நீண்டகால தடுப்புக் காவல், சித்திரவதைகள், கட்டாய ஒப்புதல் வாக்குமூலங்கள், காணாமல் ஆக்கப்படல்கள், குடும்பங்களின் சிதைவுகள் என எண்ணற்ற மனித அவலங்களின் வரலாறு இந்தச் சட்டத்தோடு பின்னிப்பிணைந்துள்ளது. போரின் முடிவுக்குப் பின்னரும் அந்தச் சட்டத்தின் நிழல் தமிழர் வாழ்வை மூடி அழிக்கின்றது.

### கலை இலக்கியங்களுக்கு அஞ்சும் ஸ்ரீலங்கா

போருக்குப் பின்னரான காலகட்டத்தில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் தமிழர்களின் நினைவுகள், அவர்களின் அரசியல் உணர்வுகள், அவர்களின் துயர வரலாறு ஆகியவை தொடர்ந்து கண்காணிப்புக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்படுகின்றன. மாவீரர் நினைவேந்தல்களிலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவுகூரல்கள் வரையான நிகழ்வுகள் ஸ்ரீலங்கா அரசின் பல்வேறு அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் மத்தியில்தான் நடக்கின்றன. இந்தச் சூழலில் எழுத்தாளர்கள், பாடகர்கள், ஊடகவியலாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர்மீது எப்போதும் இலங்கை அரசு கண்காணிப்பையும் அடக்குமுறையையும் தொடர்கிறது. அதிகாரம் எப்போதும் கலை இலக்கியங்களைக் கண்டு அஞ்சும். ஏனெனில் ஒரு கவிதை அல்லது கலை ஆயுதங்களைவிட வலிமையானதாக மாறிவிடுகிறது. ஒரு பாடல் பல நேரங்களில் ஆயிரம் பேரின் மனங்களில் எதிர்ப்பின் தீப்பொறியை ஏற்றிவிடுகிறது.



புத்தகங்கள் தடுத்து வைக்கப்படுவதும், எழுத்தாளர்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் விசாரணைக்கு அழைக்கப்படுவதும் அனுர ஆட்சிக் கதிரை ஏறிய பின்னரும் இலங்கையில் தொடர்கிறது. இந்த நிலையில்தான் சங்கீத்சனின் கைது நடந்திருக்கிறது. சங்கீத்சன் ஒரு சொல்லிசைப் பாடகன். தனது குரலால் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியவர். ஆனால் அந்தக் குரலே ஸ்ரீலங்கா அரசின் கண்களில் அச்சத்தைப் பெருக்கியது. இதுவே இலங்கையில் கருத்துச் சுதந்திரத்திற்கான இடம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. இலங்கையில் படைப்பாளிகள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள் புதியவையல்ல. போர் காலத்திலும் போருக்குப் பின்னரும் பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தல்களையும் கண்காணிப்புகளையும் சந்தித்துள்ளனர். படைப்பாளிகள் சிறையில் தள்ளப்பட்டதும், நாடுகடத்தப்பட்டதும், பலியெடுக்கப்பட்டதும் நாம் சந்தித்த வரலாறு.

### அனுரவின் கையிலும் PTA

இன்றைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாமல் செய்வோம் என்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்போம் என்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப சட்ட மாற்றங்களை மேற்கொள்வோம் என்று பல வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால் நடைமுறையில் பழைய ஆட்சிகளின் பாதையிலிருந்து விலகியதாகத் தெரியவில்லை. ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. பெயர்கள் மாறினாலும் ராஜபக்சவினரின் ஆட்சியிலேயே வாழ்கிறோம். தமிழர்கள் தொடர்பான மனநிலை அரசியலின் அடிப்படை அணுகுமுறை மாறவில்லை என்பதற்கான இன்னொரு சான்றாகவே சங்கீத்சனின் கைது அமைந்தது.

ஸ்ரீலங்கா அரசு எதிர்பாராத விசயங்கள் சங்கீத்சனின் கைது விவகாரத்தில் நடந்திருக்கிறது. கைதுக்கு எதிராக வடக்கிலும் கிழக்கிலும் பரவலான எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள், அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் என பல தரப்பினரும் குரல் கொடுத்தனர். அதைவிட முக்கியமாக தென்னிலங்கையிலும் இந்தக் கைதுக்கு எதிரான விமர்சனங்கள் வெளிப்பட்டன. ஜனநாயக உரிமைகளை மதிக்கும் சிங்கள அறிவுஜீவிகள், கலைஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் பலரும் இந்தக் கைது குறித்துக் கடுமையாக எதிர்த்துக் கேள்வி எழுப்பினர்.

### இலங்கை அரசுக்கு எதிரான குரல்கள்

புலம்பெயர் நாடுகளிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன. சமூக ஊடகங்களிலிருந்து நிலத்தில் நடந்த போராட்டங்கள் வரை பல்வேறு வடிவங்களில் ஒற்றுமைக் குரல்கள் எழுந்தன. சங்கீத்சன் என்ற ஒருவரின் விடுதலைக்காக மட்டுமல்ல, கருத்துச் சுதந்திரத்திற்காகவும், கலைச் சுதந்திரத்திற்காகவும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த அழுத்தங்களின் விளைவாகவே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட வழக்கு பின்னர் சாதாரண சட்டத்தின் (தண்டனைச் சட்டம் 120இன் கீழ்) கீழ் மாற்றப்பட்டமை, தற்காலிக வெற்றியெனலாம்.

அத்துடன் .இந்த விடயம், மிக முக்கியமான அரசியல் உண்மையை வெளிப்படுத்துகிறது. மக்களின் குரல் ஒன்றுபட்டால் பேரினவாதம் பின்வாங்க வேண்டிய நிலை உருவாகும். சட்டங்கள் எவ்வளவு கடுமையானவையாக இருந்தாலும், மக்களின் ஜனநாயகப் போராட்டம் அதைவிட வலிமையானதாக இருக்க முடியும். சங்கீத்சன் பிணையில் வெளிவந்திருப்பது அந்தப் போராட்டத்தின் ஒரு பெறுபேறு. ஆனால் இந்த வெற்றியை இறுதி வெற்றியாகக் கருத முடியாது. இன்னும் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படவில்லை. இன்னும் அதன் நிழலில் வாழும் கைதிகள் இருக்கிறார்கள். இன்னும் கருத்துக்களுக்காகவும் நினைவுகளுக்காகவும் கண்காணிக்கப்படும் மக்கள் இருக்கிறார்கள். இன்னும் கலைஞர்களும் எழுத்தாளர்களும் தங்கள் சொற்களை அளந்து பேச வேண்டிய சூழல் தொடர்கிறது.




### போராடியே ஆக வேண்டும்

சங்கீத்சன் கைது செய்யப்பட்ட வேளையில், ஈழத்தில் பாரிய பதற்றமும் அதிர்ச்சியும் மேலெழுந்தது. எமது உணர்வுகளை எப்படி வெளிப்படுத்தாமல் இருப்பது என்றும் வெளிப்படுத்தினால் சிறை என்றும் ஈழத்தில் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஸ்ரீலங்கா அரசு பாரிய அடக்குமுறைகளை எம்மீது கட்டவிழ்த்துவிடுகின்ற வேளையில் நாம் அதற்கு எதிராகப் போராடுவது தவிர்க்க முடியாத ஒரே தீர்வும் வழியும் என்பதற்கு சங்கீத்சனின் கைதும் அதற்கு எதிராக நடந்த போராட்டங்களும் தக்க சான்றுகள் ஆகின்றன.

இன்றும் யாழ்ப்பாணத்தின் வலி வடக்கில் ‘இராணுவமே வெளியேறு’ என்ற பெருங்குரலுடன் மக்கள் பல நாட்களாக தொடர் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். நில ஆக்கிரமிப்பு, இராணுவ மயம், நீதி மறுப்பு, அரசியல் தீர்வு வழங்காமை என்று பல பிரச்சினைகளுடன் இருக்கின்றது ஈழம். உண்மையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இவைகளுக்காக தீவிரமாக போராட்டங்களில் ஈடுபட்டால் ஸ்ரீலங்கா அரசைப் பணிய வைக்க முடியும் என்ற சொய்தியை பாடகரின் விடுதலைக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களும் வெற்றியும் சொல்கின்றன.

• • •




மட்டு.நகரான்

வடகிழக்கு மாகாணம் என்பது தமிழர்களின் தாயக-பூமியாகும். இந்த தாயக பூமியில் உள்ள கலைகளும் கலாசார விழுமியங்களும் பண்பாட்டு தொடர்புகளும் அதன் வரலாறுகளுமே தமிழர்களின் தொன்மையினையும் வரலாற்றினையும் எதிர்கால சந்ததிக்கு கொண்டுசெல்லும் ஊடகமாக காணப்படுகின்றது.அவற்றினை சரியான முறையில் கொண்டுசெல்லும் போது, எதிர்கால சந்ததிகள் எமது பாரம்பரியத்தினை பாதுகாத்து வடகிழக்கு தமிழர் தாயகம் என்பது முன்கொண்டுசெல்வதற்கு ஏதுவாக அமையும்.



கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் இன்று மூன்று இனங்கள் வாழ்கின்றபோதிலும் இந்த நாட்டில் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதற்கு முன்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பாரம்பரியங்களும் அதன் கலாசார விழுமியங்களுமே மேலோங்கியிருந்தமைக்கு பல்வேறு கலாசார சான்றுகளும் அதன் பண்பாட்டு விழுமியங்களும் வெளிப்படுத்திவந்தன.

வெள்ளையர்களின் ஆக்கிரமிப்பு, பாரசீகர்களின் வருகை என பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புகளாலும் பெரும் பான்மை சமூகத்தின் குடியேற்ற திட்டங்களும் ஊடுருவப்பட்ட நிலையிலும் கிழக்கில் தமிழர்களின் பாரம் பரியங்களும் பண்பாட்டு விழுமியங்களுமே அவற்றினை எதிர்கால சந்ததிக்கு கடத்தும் நிலைமைகள் இருந்தன.



கிழக்கு மாகாணம் தனித்துவமான வரலாற்றுப் பின்னணியும், செழுமையான பண்பாட்டு விழுமியங்களும் கொண்ட ஒரு பிரதேசமாகும். "முத்தமிழ் வளர்த்த முற்பதி" எனப் போற்றப்படும் இப்பிரதேசத்துத் தமிழர்களின் வாழ்வியல், சடங்குகள், கலைகள் மற்றும் சமூகக் கட்டமைப்பு என்பன அவர்களின் ஆழமான மரபையும் விழுமியங்களையும் பறைசாற்றி நிற்கின்றன.

கிழக்குத் தமிழர்களின் சமூக அமைப்பில் "குடி முறைமை" என்பது மிக முக்கிய விழுமியமாகும். தாய் வழி மரபை அடிப்படையாகக் கொண்ட இக்குடிமுறை, சமூக ஒற்றுமையையும்உறவுமுறைகளையும்பேணுவதில்முக்கிய பங்கு வகிக்கிறது.ஆலயங்களின் திருவிழாக்கள், சடங்குகள் யாவும் குறிப்பிட்ட குடிகளுக்குப் பிரித்தளிக்கப்பட்டு, கூட்டுப் பொறுப்புடன் நடத்தப்படுகின்றன. இது தங்களுக்குள் இருக்கும் ஒற்றுமையையும், பெரியோர்களை மதிக்கும் பண்பையும் வளர்க்கிறது.ஊர்ப் பெரியவர்கள் மற்றும் 'வண்ணக்கர்' (ஆலயப் பொறுப்பாளர்) போன்றோரின் வழிகாட்டலில் சமூக ஒழுக்கமும் விழுமியங்களும் காக்கப் படுகின்றன.

இதேபோன்று கிழக்கில் காணப்படும் பல்வேறு கிராமிய வழிபாட்டு முறைகளும் அதனுடன் இணைந்த பாரம்பரிய கலைகளும் அதன் பண்பாட்டு விழுமியங்கள் என்பன அந்த சமூகத்தின் வரலாற்றினையும் அதன் பாரம்பரியத்தினையும் கடத்தும் வகையிலேயே தொடர்ந்து இருந்துவருகின்றது.

கிழக்கிலங்கையில் வழிபாட்டு முறையானது குடிமுறையோடு பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பாரம்பரிய ஆலயங்களின் நிர்வாகமும், சடங்கு முறைகளும் குறிப்பிட்ட குடிகளின் அடிப் படையிலேயே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. கிராமத்துக் கோவில்களின் வருடாந்த திருவிழாக்களின் போது, ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு சடங்கும் ஒரு குறிப்பிட்ட குடியினருக்குப் பிரித்து வழங்கப்படும்.இது சமூகத்தில் கூட்டுப் பொறுப்பையும், சமத்துவத்தையும் வளர்க் கப் பயன்பட்டது மட்டுமல்ல இதனை ஒரு வரலாற் றனை அடுத்த சந்ததிக்கு கடத்தும் முறையாகவே இருந்து வந்தது.



பொலிகண்டி பழவத்தை கோயிலும் ஆயிரங்கண் பானையும்

கிழக்கிலங்கையில் குடிவழிகள் என்பது கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட வரலாற்றுரீதியான மக் கள் கூட்டங்களின் தனித்துவ அடையாளமாகும். இந்த தனித்துவ அடையாளங்கள்தான் அந்த மக்கள் மட்டுமல்ல அந்த மண்ணின் வரலாறாக கொள்ளப்படுகின்றது. இன்று மன்னர் ஆட்சியினைக்கொண்டு நாங்கள் வரலாறுகளைக் கணிக்கும்போது அதே போன்ற ஒரு கணிப்பீடுதான் இந்த குடிகள் தொடர்பான வரலாறுகளும் காணப்படுகின்றது.கிழக்கில் ஒரு மன்னர் ஆட்சியின் வழித்தோன்றலாக அல்லது அதற்கு முற்பட்ட ஒரு குடிவழியாக கருதப்படுகின்றது. இது தான் கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் தொன்மை பாரம் பரியத்தின் வெளிப்பாடுகளாகும்.

குறிப்பாக கதிர்காமம்,உகந்தைமலை,திருக் கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம்,கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ் வரம் ஆலயம் உட்பட கிழக்கில் உள்ள பல ஆலயங்களில் வரலாற்றுகளை எடுத்து நோக்கும் போது, இதனை சுற்றி பல குடிகள் அல்லது வரலாற்று வழமைகள் காணப்படுகின்றது.இதுவே கிழக்கு தமிழர்களின் வரலாற்று சான்றாகவும் எதிர்கால சந்ததிக்கு எமது வரலாற்றினை கடத்தும் ஒரு சாதனமாகவும் இருந்துவருகின்றது.

கிழக்கு மாகாணத் தமிழர்களின் வழிபாடுகளும் குடிவழிகளும், அவர்களின் சமூக ஒருமைப்பாட்டைக் காக்கும் உன்னதக் கருவிகளாக விளங்குகின்றன. குடிமுறை என்பது மனித உறவுகளை நெறிப்படுத்த, வழிபாட்டு முறை என்பது அவர்களின் ஆன்மீகத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. கால மாற்றத்தினால் தாய்வழிச் சொத்துரிமை போன்ற சில கூறுகள் மறைந்து வந்தாலும், ஆலயச் சடங்குகளின் போது குடிகளின் பெயரால் மக்கள் ஒன்றிணைவது, கிழக்கிலங்கைத் தமிழர்கள் தங்கள் பாரம்பரிய விழுமியங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை சான்று பகிர்கின்றது.

ஆனால் இன்றைய காலத்தில் நவீனத்துவமும் குடிமுறைகள் என்றால் அதுவொரு வேண்டத்தகாத செயற்பாடு, அது பிரிவினைகளும் சமூக முரண்பாடுகளை ஏற்படுத்துவதாக கூறி அவற்றினை புறந்தள்ளி செயற்படும் நிலைமைகள் அதிகரித்துவருகின்றன.



இதேபோன்று நாட்டார் வழிபாடுகள், பாரம்பரியக் கலைகள் எனத் தமிழர்களின் தனித்துவமான அடையாளங்களைத் தாங்கி நிற்கும் இப்பிரதேசம், இன்று நவீனமயமாக்கல், உலகமயமாக்கல் மற்றும் போருக்குப் பின்னரான சமூக மாற்றங்கள் காரணமாகத் தனது அசல் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை வேகமாக இழந்து வருகின்றது. ஆலயங்களின் சடங்குகளைக் குடிகளின் அடிப்படையில் பிரித்து நடத்தி, அதன் மூலம் சமூக ஒற்றுமையைப் பேணிய 'வண்ணக்கர்' மற்றும் 'ஊர்ப் பெரியவர்கள்' முறைமை மாறி, இன்று அரசியல் மற்றும் பண பலம் கொண்ட நிர்வாக சபைகளாக அவை உருவெடுத்துள்ளன. இதனால் குடிகளுக்கு இடையிலான பிணைப்பு அற்றுப்போகும் நிலைமைகள் காணப்படுகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றுசிறப்புகளைக் கொண்ட கிராமிய வழிபாட்டு முறைகளையும் கிழக்கின் தனித்துவமான வழிபாட்டு முறைமைகளையும் கொண்ட ஆலயங்கள் அதன் வரலாற்றுதளத்திலிருந்து விலகி ஆகம வழிபாடுகளுக்குள் நுழைந்துள்ளதன் காரணமாக அதன் வரலாற்றுபின்னணி சிதைக்கப்பட்டு தமிழர்களின் பாரம்ப வரலாறுகள் அழிந்துபோகும் நிலைமையே காணப் படுகின்றது.

கிழக்கு மாகாண தமிழர்களின் கிராமிய வழி பாட்டு முறைகள் என்பது அவர்களின் வெறும் ஆன்மீக வெளிப்பாடு மட்டுமல்ல் அது அவர்களின் வரலாறு, கலை, இசை மற்றும் சமூக வாழ்வியலின் சான்றாகும். ஆகம வழிபாடுகளைப் போற்றும் அதேவேளை, எமது வேர்க ளான கிராமிய வழிபாட்டு முறைகளையும், சடங்குசார் கலைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். பல்கலைக்கழகங்கள், பண்பாட்டு அமைப்புகள் மற்றும் இளைய சமுதாயம் ஒன்றிணைந்து இவற்றை டிஜிட்டல் மயமாக்குவதும், பாரம்பரியக் கலைஞர்களை ஊக்குவிப்பதும் மட்டுமே இந்த அழிவில் இருந்து எமது அடையாளங்களை மீட்டெடுப்பதற்கான வழியாகும்.

ஒரு சமூகத்தின் கலைகளும் கலாசார விழுமியங்களும் அழிவது என்பது அச்சமூகத்தின் வேர்கள் அறுக் கப்படுவதற்குச் சமமாகும்.

தொடர்ச்சி: பக்கம் 17




## கோபிகை

கனேடிய அரசு, கனேடியப் பல்கலைக்கழகம், வடக்கு மாகாணம், LCIN போன்றவை இணைந்து பெண் தொழில் முனை வோரின் வளர்ச்சிப் பாதையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் இந்த மாநாடு நடாத்தப்பட்டது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, இவ்வாறான கைத்தொழில் முயற்சியாளர்களில் தான் தங்கியுள்ளது. அவர்கள் உருவாக்கும் ஒவ்வொரு பொருளின் திறனும் உள்ளூர் சந்தைப்படுத்தலில் இடம்பிடித்து பின்பு சர்வதேச சந்தையை அடையும் போது கிடைக்கும் வருமானம் நாட்டின் மிகப்பெரிய வளமாகும்.

இத்திட்டமானது, அரசசார்பற்ற நிறுவனத்துடன் அரச பங்காளர்களையும் இணைத்து நிதி நிறுவனங்களையும் சேர்த்துக் கொண்டு நடாத்தப்படுகிற ஒரு செயற்றிட்டமாகும்.



ஒரு தொழில் முனைவோராக வெற்றி பெறுவதென்பது சாதாரண விடயமல்ல, எமது சூழல்தொகுதி அனைத்தும் தொழில் முனைவோருக்கு உதவ வேண்டும். அவர்களின் உற்பத்திகளை பரவலாக்க உதவ வேண்டும், இதன் ஆரம்பம் என்பது மிக கடினமாகவே இருக்கும். குடும்பத்தின் ஒத்துழைப்பு இன்றியமையாத ஒன்று.

தொழிற்கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்தி இவற்றுக்கான பாதையை பலமானதாக ஆக்கும் நோக்கில் கனேடியன் நிறுவனம் எமது நாட்டுக்கு உதவி செய்கிறது. லின் நிறுவனமும் பங்காற்றுகிறது.

இது, வியாபாரத்தை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வதற்கான ஒரு களம், பல பெண்களுடைய கனவுப் பாதையை சீரமைக்கின்ற ஒரு நம்பிக்கை. சிறகு விரிக்க நினைக்கிற பெண்களுக்கு வானத்தைப் பரிசளிக்கிற ஒரு இனிய வாய்ப்பு.



தொழில் முனைவோரான பெண்கள், பல்வேறான சவால்களை எதிர்கொள்கிறார்கள், அவர்களின் வாழ்க்கைப் பாதை என்பது மிகவும் கடினமான ஒன்றாகும். உற்பத்தி செய்த ஒரு பொருளை சந்தைப்படுத்துவதற்கிடையில் ஏற்படுகின்ற நெருக்கடிகள் நிறையவே உள்ளது. தமது வாழ்வின் ஆதாரமாகவே பெரும்பாலான பெண்கள் இதனைப் பற்றிக் கொள்கின்றனர். வித்தியாசமான சிந்தனைகளை தம் மனதில் கொண்டிருந்தாலும் அவற்றுக்கு செயல் வடிவம் கொடுத்து, அதலப் பரவலாக்கும் வரை அவர்கள் சந்திக்கும் சவால்கள் ஏராளம்.

அன்றாட பிழைத்திருத்தலுக்கு மட்டுமே அல்லாமல் இதில் தனித்துவமாகவும் நிலையான ஒரு பெயரைப் பெறவுமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டியது அவர்களுக்கான தேவையாக உள்ளது. இத்தகைய வாய்ப்புகள் அவர்களுக்கு திறனை மேம்படுத்துவதோடு பெரிய நம்பிக்கையையும் கொடுக்கின்றன என்றே கூற வேண்டும்.

வடமாகாண தொழிற்றுறைத் திணைக்கள பிரதிநிதி தனது காத்திரமான கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தார்.

நுண் மற்றும் சிறிய வகைக்குள் அடையாளப் படுத்தக்கூடியவர்களாகவே வடமாகாண தொழிற்றுறை பெண்கள் உள்ளனர். அவர்களிடம் திறமைகள் கொட்டிக்கிடக்கிறது என்றாலும் உயர்ந்த இடங்களைப் பிடிப்பது அவர்களால் இயலாத ஒன்றாகவே உள்ளது. காரணம், முதலீட்டின் அளவு, சந்தைப்படுத்தல் வசதி, ஊக்குவிப்பு தன்மை என்பனவாகும் எனவும் உலகளாவிய ரீதியில் விநியோகப்பணி தற்போது தேக்கமடைந்துள்ளது. இதுவும் கூட இந்த உற்பத்தியாளர்களை அதிகளவு பாதிக்கிற விடயமாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

பல நுண்ணியமான சவால்களையும் எமது வடமாகாண தொழில்முனைவோர் எதிர்கொள்கின்றனர். அவர்கள் சமூகத்தில் ஒரு அளவுகோலுடனேயே பார்க்கப்படுகின்றனர்.

கௌரவமான தன்னிகரில்லாத ஒரு இடத்தை இவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதே இவ்வாறான நிகழ்வின் நோக்கமாக இருக்கிறது எனவும் அவர் கூறியிருந்தார்.

இந்த துறையில் பயணிக்கிற பெண்களுக்கு, நிதிக்கட்டமைப்பு, நிதி முகாமைத்துவம் தொடர்பான அறிவு, சந்தைப்படுத்தல் வசதி என்பவை பற்றி அதிகமாக தெளிவூட்டப்பட வேண்டும்.



வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களம் இந்த விடயத்தை கருத்தில் கொண்டு செயற்படுவதாகவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

வடபகுதியில் 52 வீதத்திற்கு மேல் பெண்கள் இத் துறையில் பயணிக்கின்றனர். இந்த நாட்டின் வருவாயில் பெண் தொழில் முயற்சியாளர்களின் பங்கு அளப்பரியது. அவர்களின் தொழில்திறன் அளப்பரியது. இந்த செயற்றிட்டத்தின் மூலம் இலவச பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

எமது பெண்கள், பொதுவாக, தொழில் முயற்சியில் ஈடுபடுவதே பிரச்சினை தான், அவர்கள் பல சங்கடங்களையும் சந்திக்க வேண்டியதாகவே உள்ளது. இவர்கள் வெற்றி வாய்ப்புகளை அடைய வேண்டும் எனில், தொழில் முயற்சியாண்மை வாய்ப்பு தேடுதல், என்கிற பண்பு மிக முக்கியமாக உள்ளது. வித்தியாசமாகச் சிந்திக்கும் பண்பு கொண்டவர்களுக்கே செயல்கள் வித்தியாசப்படும். அவர்களின் அடைவு மட்டங்கள் வித்தியாசப்படும்.

ஒரு இலக்கை நிர்ணயிப்பதே தொழில் முயற்சியாளர்களின் வெற்றிக்கான காரணம் ஆகும். அந்த இலக்கை அடையக்கூடிய வகையில் தொடர்பாடல் திறனை வளர்த்து கொள்ள வேண்டும். மற்றவர்களுடனான பகிர்தல் என்பது, இவர்களின் தொழில் வாய்ப்புகளை மேலும் அதிகரிக்கும் ஒரு விடயமாகும்.



வங்கிகள், அரச நிறுவனங்களாலும் சில வாய்ப்புகள் கிடைக்கிறதெனினும் வாய்ப்புகளைத் தேடிச் செல்ல வேண்டும். அவை சரியான வகையில் அமைய வேண்டும். அவர்களால் கோரப்படுகின்ற ஆவணங்களை ஒன்று திரட்டி வழங்கவேண்டும், இவை எல்லாம் மிகவும் கடினமானவையாக உள்ளன. எமது நிலைப்பாட்டைப் பொறுத்தவரை நாங்கள் அதாவது தொழில் முனைவோராக உள்ள பெண்களாகிய ஒவ்வொருவரும் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இம்முயற்சியில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உறுதிப்படுத்தல் தேவையான மிக முக்கிய விடயமாகும். வவுனியா பல்கலைக்கழகம் யாழ். பல்கலைக்கழகம் என்பவை, இவ்வாறு சிறு கைத்தொழில் முயற்சியாண்மை தொடர்பில் கற்கை நெறிகளை நடாத்துகின்றன எனினும் எல்லோருக்கும் இதில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை. நேரம், தூரம், கட்டணம், வருமான வீதம் இவை எல்லாம் பலருக்கு தடையாக உள்ள காரணிகளாகும்.



மொத்தவருமானத்தில் பெரும் பங்கு இவர்கள் மூலமாகவே கிடைக்கின்றது, அதாவது, ஒரு நாட்டின் கிராம மட்ட மற்றும் தேசிய வருமானத்தில் பெரும்பகுதியை இவர்களே உருவாக்கி வழங்குகின்றனர். பெண் தலைமைத்துவ நிறுவனம் என்பது உண்மையில் நல்லதொரு தொடர் முயற்சியாகவே விளங்குகிறது. முக்கிய முடிவுகளை எடுக்கும் சந்தர்ப்பம் பெண்களிடம் இருப்பதும் இந்நிறுவனங்களின் வெற்றிக்கான காரணமாக அமைகிறது.

13 நிதி நிறுவனங்கள் 10 வங்கிகள் ஒன்றிணைந்து

தொடர்ச்சி: பக்கம் 15




மருதன் ராம்

இலங்கையின் மலையகப் பகுதிகளை கடுமையாகப் பாதித்த டிட்வா சூறாவளி தாக்கம் இடம்பெற்று ஐந்து மாதங்களுக்கும் மேலாகியும், பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னும் முழுமையாக மீளாத நிலை தொடர்கிறது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகள், வாழ்வாதாரங்கள் மற்றும் சொத்துக்களை இழந்து, இன்னும் தற்காலிக முகாம்கள், வாடகை வீடுகள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்து வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்றனர்.



அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவுகள், நிலைமை இன்னும் சீரடையவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன. இதேவேளை, இந்த அனர்த்தத்திற்குப் பின்னரான மீட்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் கடும் விவாதங்களும் இடம்பெற்றுள்ளன. எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் செயல்பாடுகளை விமர்சித்துள்ள நிலையில், அரசாங்கம் தனது திட்டங்களையும் எதிர்கால நடவடிக்கைகளையும் விளக்கியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தரவுகளின் படி, டிட்வா சூறாவளி தாக்கத்திற்குப் பின்னரும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தங்களது நிரந்தர குடியிருப்புகளுக்குத் திரும்ப முடியாத நிலையில் உள்ளனர். தற்போது நான்கு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நிவாரண மற்றும் பாதுகாப்பு முகாம்களில் 465 குடும்பங்களைச் சேர்ந்த 1,337 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் இயங்கும் இரண்டு மத்திய நிலையங்களில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 133 பேர் தங்கியுள்ளனர்.



நுவரெலியா மாவட்டத்தில் ஒரு மத்திய நிலையத்தில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேர் வசித்து வருகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் உள்ள இரண்டு மத்திய நிலையங்களில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் இன்னும் தற்காலிக வாழ்வை மேற்கொண்டு வருகின்றனர். எனினும், மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டது பதுளை மாவட்டமாகும். அங்கு அமைக்கப்பட்டுள்ள 13 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் மட்டும் 1,003 பேர் தங்கியிருப்பது அனர்த்தத்தின் தீவிரத்தை வெளிப்படுத்துகிறது. பல ஆயிரக் கணக்கான மக்கள் வாடகை வீடுகள், உறவினர்களின் வீடுகள் மற்றும் தற்காலிக வசிப்பிடங்களில் வாழ்ந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் குறித்த அனர்த்தத்தில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள மலையக பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கடுமையான வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இதன்படி, டிட்வா சூறாவளி பாதிப்புகளுக்குப் பின்னான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், சூறாவளி தாக்கி ஏழு மாதங்கள் கடந்திருந்தாலும் 35,000-க்கும் அதிகமான மக்கள் இன்னும் தற்காலிக குடியிருப்புகள் மற்றும் வாடகை வீடுகளில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டார்.



மலையகப் பகுதிகளில் ஆபத்தான நிலச்சரிவு அபாயம் கொண்ட இடங்களில் வாழும் மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் இன்னும் முறையாக முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் சாடினார். பல பகுதிகளில் நிலச்சரிவால் வீதிகளில் தேங்கியுள்ள மண்குவியல்கள் இன்னும் அகற்றப்படாத நிலை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். சேதமடைந்த பாலங்களுக்கு பதிலாக அமைக்கப்பட்ட தற்காலிக மணல் மூடைப் பாலங்கள் கூட பின்னர் பெய்த மழையினால் அடித்துச் செல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாமல் ராஜபக்ச தனது உரையில், டிட்வா சூறாவளி பாதிப்புகளுக்காக இந்தியா 100 மில்லியன் அமெரிக்க டொலர் மானிய உதவியையும், 300 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான கடனுதவியையும் வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இவ்வளவு பெரியளவிலான நிதியுதவி கிடைத்திருந்த போதிலும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் கணிசமான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என அவர் விமர்சித்தார். அரசாங்கம் வழங்குவதாக அறிவித்த நட்டஈட்டுத் தொகைகளையே முழுமையாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். அனர்த்த நிவாரண நடவடிக்கைகள் நிர்வாக ரீதியாக மெதுவாக நகர்வதாகவும் இதன் விளைவாக பாதிக்கப்பட்ட மலையக மக்கள் இன்னும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தனது உரையில் மலையக மக்களுக்கான இந்திய வீடமைப்புத் திட்டம் குறித்து முக்கியமான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். குறிப்பாக டிட்வா சூறாவளி தாக்குவதற்கு முன்னரே மலையகத்தில் நடைமுறையில் இருந்த இந்திய வீட்டுத் திட்டம் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்ததாக அவர் சாடினார்.



2024 மற்றும் 2025 ஆண்டுகளில் தலா 4,500 வீடுகள் வீதம் மொத்தம் 9,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை ஒரு வீடு கூட முழுமையாகக் கட்டி முடிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார். அத்துடன், இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 1,300 வீடுகளை அமைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருந்த போதும், ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரசியல் காரணங்களால் பயனாளிகள் மாற்றப்பட்டு திட்டம் கைவிடப்பட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். “இது முந்தைய அமைச்சரால் கொண்டுவரப்பட்ட திட்டம்” என்ற காரணத்தினால் திட்டம் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டதாக வும் அவர் கூறினார்.

ஜீவன் தொண்டமான் மேலும் கூறுகையில், இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் 550 சதுர அடி பரப்பளவுள்ள வீடொன்றின் ஆரம்ப மதிப்பீடு 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக இருந்தது. பின்னர் நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் இந்திய அரசுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் காரணமாக அந்த மதிப்பீடு 28 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். இவ்வாறு செலவு அதிகரிக்கப்பட்ட போதிலும் கட்டுமானப் பணிகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை என ஜீவன் தொண்டமான் குற்றஞ்சாட்டினார். இதனால் மலையக மக்களின் நீண்டகால வீடமைப்பு பிரச்சினைக்கு தீர்வு காணும் வாய்ப்பு இழக்கப்பட்டதாக அவர் வலியுறுத்தினார்.


### அரசாங்கத்தின் பதில்: புதிய காணியுடன் 50 இலட்சம் ரூபாய் வீடு

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு பதிலளித்த பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, அரசாங்கம் மலையக மக்களுக்காக முன்னெப்போதும் இல்லாத அளவிலான வீடமைப்பு மற்றும் மீள்குடியேற்ற திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்தார். டிட்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மலையகக் குடும்பங்களுக்கு புதிய காணியுடன் 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வீடுகள் வழங்கப்படவுள்ளதாக அவர் அறிவித்தார்.

தொடர்ச்சி: பக்கம் 16




“என் இனிய தமிழ் மக்களே” என்ற சொற்களோடு என்றும் ஒலிக்கும் அந்தக்குரல் மௌனமாகிவிட்டது. 2026, ஜூன் 10 அன்று காலையில், சென்னையில் உள்ள ஒரு மருத்துவமனையில், ‘சின்னசாமி பெரியமாயத் தேவர்’ என்ற இயற்பெயர் கொண்டவரும், ‘இயக்குநர் இமயம்’ என்று மக்களால் போற்றப்பட்டவருமான பாரதிராஜா தனது 84-ஆவது வயதில் காலமானார். அவரோடு ஒரு திரைப்பட உருவாக்குநர் மட்டுமல்ல, ஒரு தமிழ் மனச் சாட்சியும் விடைபெற்றிருக்கிறது. கலைஞனின் கடமை என்பது திரையரங்கத் திரையின் எல்லையோடு முடிந்து விடுவதில்லை என்பதை ஆழமாக உணர்ந்தவர் அவர்.



அன்று காலை, தமிழ்நாடு ஒரு பண்பாட்டு மற்றும் தனிப்பட்ட பேரிழப்பின் துயரத்தோடு விழித்தெழுந்தது. அவர் பிறந்த தேனியின் நெல்வயல்கள் முதல், அவர் தனது சொந்தக் கால்களால் நடந்து சென்று வரலாற்றில் என்றும் மறையாத நட்புறவை வெளிப்படுத்திய போரினால் சிதைந்த கிளிநொச்சியின் செம்மண் பூமி வரை—பாரதிராஜாவுக்குத் தமிழ் அடையாளம் என்பது வெறும் முழக்கமல்ல, அது ஒரு வாழ்வியல் மரபு. அதை அவர் தனது திரைப்படங்களிலும், பொதுவாழ்விலும், தாம் தேர்ந்தெடுத்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வெளிகளிலும் சுமந்து சென்றார். நாம் இன்று அவரைப் பெருந்துயரத்தோடு மட்டுமல்லாமல், ஒரு மாபெரும் வாழ்வு தரக்கூடிய நிறைவோடும் நினைவுகூர்கிறோம்.

## தமிழ் மண்ணின் மகன்: இளமைக்காலமும் உருவாக்கமும்

அவர் 17 ஜூலை 1941 அன்று, அன்றைய சென்னை மாகாணத்தின் மதுரை மாவட்டத்திற்கு உட்பட்ட (தற்போதைய தேனி மாவட்டம்) அல்லிநகரத்தில் பிறந்தார். அது ஒரு விவசாயப் பகுதி; மக்கள் பருவநிலைகளின் சுழற்சிக்கு ஏற்ப வாழ்ந்தார்கள். இளம் சின்னசாமி, பிற்காலத்தில் தனது திரைப்படங்களை வரையறுக்கப் போகும் காட்சிகளாலும், ஒலிகளாலும், வாழ்வியலாலும் சூழப்பட்டு வளர்ந்தார்—கிராமத்தின் தூசி நிறைந்த ஒற்றையடிப்பாதைகள், காய்ந்த நிலத்தில் பெய்யும் புது மழையின் மண் வாசனை, மற்றும் சாதாரண மனிதர்களின் அசாத்தியமான உணர்வுகள் ஆகியவை அவரைச் செதுக்கின.

அவர் திரைப்பட இயக்குநராவதற்கு முன்பு, ஒரு சுகாதார ஆய்வாளராகப் பணியாற்றினார். தனது பணியின் ஒரு பகுதியாகத் தமிழ்நாட்டின் கிராமங்கள் முழுவதும் பயணம் செய்தார்; அதுவரை நகரமயமாக்கப்பட்ட தமிழ் சினிமா எட்டிப்பார்க்கக்கூட நினைக்காத வெளிகளுக்குள் அவர் நடந்து சென்றார். அது வெறும் வேலையல்ல; அது அவரது மக்களுக்கான கல்வி—அவர்களின் கண்ணியம், துயரம், அழகு மற்றும் மீண்டெழும் திறன் ஆகியவற்றைக் கற்றுக்கொண்ட காலம். சினிமா ஆசைகொண்ட மற்ற இளைஞர்கள் சென்னையின் கவர்ச்சியை நோக்கி ஓடியபோது, பாரதிராஜா கிராமங்களின் ஆழத்தை நோக்கி ஈர்க்கப்பட்டார். தான் இன்னும் படமாக்காத ஒரு சினிமாவைத் தனக்குள் அவர் சேமித்துக் கொண்டிருந்தார்.

கன்னடத் திரைப்பட இயக்குநர் புட்டண்ணா கனகல், பி. புள்ளையா, எம். கிருஷ்ணன் நாயர் போன்ற பலரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியதன் மூலம் திரைப்படத்துறையில் அவரது முறையான நுழைவு அமைந்தது. அவர் உற்றுநோக்கினார், உள்வாங்கினார், காத்திருந்தார். அவரிடம் சொல்வதற்கு ஒரு கதை இருந்தது, அதை அவசரமாகவோ தவறாகவோ சொல்ல அவர் விரும்பவில்லை. நேரம் வந்தபோது, அவர் அதைச் சொன்ன விதம் தமிழ் சினிமாவை நிரந்தரமாக மாற்றியமைத்தது.

## ‘16 வயதினிலே’ தந்த புரட்சி: புதிய தமிழ் சினிமாவின் பிறப்பு

செப்டம்பர் 15, 1977. தமிழ் சினிமா இனி பழையபடி இருக்கப்போவதில்லை என்பதை உணர்த்திய நாள். ‘16 வயதினிலே’ திரையரங்குகளுக்கு வந்து, தமிழ் சினிமா உருவான காலம் தொட்டு நிலவி வந்த அனைத்து மரபுகளையும் உடைத்தெறிந்தது. தமிழ் திரைப்படங்கள் பெரும்பாலும் செயற்கையான படப்பிடிப்பு அரங்குகளுக்குள்ளேயே, நாடகத்தனமான பாணிகளுடன் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், பாரதிராஜா ஒரு தீவிரமான புரட்சியைச் செய்தார்: அவர் தனது கேமராவைத் தூக்கிக்கொண்டு வெளியேறினார். அவர் நிஜமான கிராமங்களுக்கும், நிஜமான வயல்வெளிகளுக்கும், ஆறுகளுக்கும், சாலைகளுக்கும் சென்றார். தனது நடிகர்கள் அந்தப் பின்னணியில் வெறும் நடிப்புத் திறமையைக் காட்டுவதை விடுத்து, அந்த இடத்து மனிதர்களாகவே வாழ வேண்டும் என்று அவர் கோரினார்.



இத்திரைப்படம் மயிலு என்ற பதினாறு வயது கிராமத்துப் பெண்ணையும், அவளது வாழ்க்கையில் குறுக்கிடும் இரு முற்றிலும் மாறுபட்ட இளைஞர்களையும்—கமல்ஹாசன் ஏற்ற மென்மையான, நலிவடைந்த சப்பாணி மற்றும் ரஜினிகாந்த் ஏற்ற முரட்டுத்தனமான பரட்டை ஆகிய கதாபாத்திரங்களையும்—பின்தொடர்ந்தது. சிறீதேவி ‘மயிலு’ என்ற கதாபாத்திரத்திற்குத் தந்த இயல்பான பங்களிப்பு, இந்திய சினிமாவில் ஒரு மாபெரும் மாற்றத்திற்கான தொடக்கமாக அமைந்தது.

கமல்ஹாசன், சிறீதேவி, ரஜினிகாந் ஆகிய மூவரும் பிற்காலத்தில் சாதனைக் கலைஞர்களாக மாறுவதற்குக் காரணமான இப்படம், ஒரு புதிய சினிமா மொழியை உலகிற்கு அறிவித்தது.

அப்போது அதிகம் அறியப்படாத இளையராஜாவின் இசை, தமிழர்களின் பண்பாட்டு நினைவின் ஒரு பகுதியாக மாறியது. “செந்தூரப் பூவே” போன்ற பாடல்கள் எஸ். ஜானகிக்கு சிறந்த பெண் பின்னணிப் பாடகருக்கான தேசிய திரைப்பட விருதைப் பெற்றுத் தந்ததுடன், தமிழர்களின் உணர்வுப்பூர்வமான நினைவுகளில் ஆழப் பதிந்தது. தமிழ் மண்ணின் மகனுக்கும், அதன் இசையை நன்கு அறிந்த ஒரு மாமேதைக்கும் இடையிலான அந்தத் தொடக்கக் கூட்டணி,

திலீபன்

இந்திய சினிமா வரலாற்றில் மிகச் சிறந்த படைப்புகளைத் தந்த கூட்டணியாக உருவெடுத்தது.



திரையரங்கு விநியோகஸ்தர்கள் இத்திரைப்படத்தைத் தொட மறுத்து, இது ஒரு கிராமத்து வெள்ளந்திப் படம், இதற்குப் பார்வையாளர்கள் கிடைக்க மாட்டார்கள் என்று ஒதுக்கித் தள்ளினர். ஆனால், அப்படம் 175 நாட்கள் ஓடி சாதனை படைத்தது. தமிழ் சினிமா இறுதியாகத் தனது சொந்த மண்ணைக் கண்டடைந்தது.

## தமிழ் நிலத்தின் திரைக் காவியங்கள்

‘16 வயதினிலே’ படத்திற்குப் பிறகு அவர் அதன் சூத்திரத்தை மீண்டும் செய்யாமல், தனது பார்வையை மேலும் ஆழப்படுத்தினார். பாரதிராஜா அடுத்த நான்கு தசாப்தங்களைத் தமிழ் கிராமிய வாழ்க்கையின் ஒரு காவியச் சித்திரத்தை உருவாக்குவதில் செலவிட்டார்—அதன் காதல், வன்முறை, சாதியம், உழைப்பு, நாட்டுப்புற மரபுகள் மற்றும் மனித கண்ணியம் ஆகியவற்றைத் தனது படங்கள் மூலம் பதிவு செய்தார்.

அதே நேரத்தில் ‘சிகப்பு ரோஜாக்கள்’ (1978) அவரது பன்முகத்தன்மையைக் காட்டும் வகையில் ஒரு உளவியல் ரீதியான அதிர்ச்சியை அறிமுகப்படுத்தியது. ‘அலைகள் ஓய்வதில்லை’ (1981) மனித வாழ்க்கையை வடிவமைக்கும் கட்டுப்பாடற்ற சக்திகளுக்குக் கடலை ஒரு குறியீடாகப் பயன்படுத்தியது. ‘நிழல்கள்’ (1980) வேலையின்மை மற்றும் கிராமப்புற இளைஞர்கள் எதிர்கொள்ளும் ஏமாற்றங்களை இடதுசாரிப் பார்வையோடு அணுகியது. ஒவ்வொரு படமும் அவர் உருவாக்கி வந்த சினிமா மொழிக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்தது.

‘முதல் மரியாதை’ (1985) அவரது மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. ஒரு வயதான கிராமத் தலைவருக்கும் ஒரு இளம் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் கட்டுப்படுத்தப்பட்ட, சாத்தியமற்ற காதலின் கதையை, சமூக ஒழுங்குமுறைகள் மற்றும் மனித ஏக்கம் ஆகியவற்றின் பின்னணியில் மிக நேர்த்தியாகக் கையாண்ட விதம், அதற்குச் சிறந்த தமிழ்த் திரைப்படத்திற்கான தேசிய விருதைப் பெற்றுத் தந்தது. ‘வேதம் புதிது’ (1987) சமூகக் கருத்துகளுக்கான தேசிய விருதையும், ‘கருத்தம்மா’ (1994) பெண் சிசுக்கொலைக்கு எதிரான விழிப்புணர்விற்கான

தொடர்ச்சி: பக்கம் 12

## இயக்குநர் இமயம் ... தொடர்ச்சி...

விருதையும், 'அந்திமந்தாரை' (1996) சிறந்த தமிழ்த் திரைப் படத்திற்கான விருதையும் வென்றன. 'கடல் பூக்கள்' (2001) சிறந்த திரைக்கதைக்கான விருதைப் பெற்றது. அவரது தெலுங்குத் திரைப்படமான 'சீதாகோக சிலுகா' (1981) சிறந்த தெலுங்குத் திரைப்படத்திற்கான தேசிய விருதை வென்றதன் மூலம் அவரது பார்வை மொழியியல் எல்லைகளைக் கடந்தது என்பதை நிரூபித்தது.

மொத்தம் ஆறு தேசிய திரைப்பட விருதுகள், நான்கு தென்னக பிலிம்பேர் விருதுகள், ஆறு தமிழ்நாடு மாநில திரைப்பட விருதுகள், ஒரு நந்தி விருது எனப் பல விருதுகளைப் பெற்றார். இந்திய அரசு 2004-ஆம் ஆண்டில் அவருக்கு 'பத்மசிறீ' விருது வழங்கி கௌரவித்தது. தமிழ், தெலுங்கு, இந்தி எனப் பரந்து விரிந்த அவரது 44 திரைப் படங்கள், ஒரு சமூகத்தின் சுயவிவரப் படமாகத் திகழ்கின்றன.

அவர்புதியநட்சத்திரங்களைஉருவாக்கியவராகவும் திகழ்ந்தார். திரைப்பட வரலாற்றில் தனது படங்களில் அறிமுகமாகும் நடிகர்களின் பெயர்களை 'R' என்ற எழுத்தில் தொடங்குமாறு மாற்றுவதை அவர் ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஆனால் விருதுகளும் எண்களும் அவர் செய்த சாதனையை முழுமையாக விளக்கிவிட முடியாது. பாரதி ராஜா செய்தது என்னவென்றால், தமிழ் சினிமா தன் முகத்தைத் தானே நேர்மையாகப் பார்ப்பதற்கான அனுமதியை வழங்கியது—கிராமத்துப் பெண்ணை ஒரு செயற் கையான கற்பனைப் பாத்திரமாகப் பார்க்காமல், ஒரு உண்மையான உலகின் நன்னெறி மற்றும் உணர்வு மையமாகப் பார்க்க வைத்தார். சினிமா யாரிடம் போய்ச் சேர வேண்டுமோ, அந்த மக்களிடமே அதைத் திருப்பிக் கொடுத் தார்.

### கிளிநொச்சிப் பயணம்

பாரதிராஜாவின் அரசியல் வாழ்வில், போர்நிறுத்தக் காலத்தில் தமிழீழத்தின் தற்காலிகத் தலைநகராக விளங்கிய கிளிநொச்சிக்கு அவர் மேற்கொண்ட தனிப்பட்ட பயணம் மிக முக்கியமானது. ஈழ ஆதரவை வெறும் பேச்சுகளோடும் அறிக்கைகளோடும் நிறுத்திக்கொண்ட பலருக்கு மத்தியில், பாரதிராஜா நேரடியாகத் தமிழீழ மண்ணிற்குள் அடி எடுத்து வைத்தார்.

அக்காலகட்டத்தில் கிளிநொச்சி ஒரு சாதாரண இடமாக இருக்கவில்லை. அது பள்ளிகள், நீதிமன்றங்கள், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள் எனத் தன் சொந்தக் காலில் நின்ற ஒரு நிர்வாகக் கட்டமைப்பின் மையமாகத் திகழ்ந்தது. அங்குச் செல்வது என்பது, “நான் இந்த நிலத்தை அங்கீகரிக்கிறேன், இந்த மக்களோடு நான் நிற்கிறேன்” என்று தன் உடலால் பிரகடனம் செய்வதாகும்.

அப்பயணத்தின் போது, அவர் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தார். வெவ்வேறு துறைகளில் தமிழர்களுக்காகத் தங்கள் வாழ்க் கையை அர்ப்பணித்த இரு ஆளுமைகளின் சந்திப்பு அது. பாரதிராஜாவின் சினிமாக்களையும் அதன் தமிழ் மானுடத்தையும் நீண்டகாலமாக மதித்த பிரபாகரன், அவரிடம் ஒரு தனிப்பட்ட விருப்பத்தை வெளிப்படுத்தினார்: பாரதிராஜா என்றாவது ஒரு நாள் ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய ஒரு திரைப்படத்தை இயக்க வேண்டும்—தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தின் உண்மையான வரலாற்றைத் திரைவடிவில் கொண்டு வர வேண்டும் என்பதே அது. அந்த விருப்பம் 2009-இன் பேரழிவால் நிறைவேறாமல் போனது. ஆனால், அது அவ்விருவருக்கும் இடையே இருந்த பரஸ்பர மரியாதையைக் காட்டுகிறது. தேசியத் தலைவர் பிரபாகரன் பாரதிராஜாவைத் தமிழ்ப் பண்பாட்டு இறையாண்மையின் ஒரு சக பயணியாகக் கண்டார். பாரதிராஜாவும், கிளிநொச்சி மக்கள் தங்கள் வீடுகளைப் பேணி, நிறுவனங்களை உருவாக்கி, தங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதை, தான் திரையில் காட்டிய அதே தமிழ் சமூகத்தின் நீட்சியாகக் கண்டார்.

பாரதிராஜா கிளிநொச்சியிலிருந்து ஒரு சாட்சியமா கத் திரும்பினார். தான் கண்ட மக்களின் ஆசைகளையும் கண்ணியத்தையும் பற்றிப் பேசினார். செய்தி அறிக்கைகள் மூலமாக மட்டுமே ஈழப் போராட்டத்தை அறிந்திருந்த தமிழ்நாட்டு மக்களுக்கு, பாரதிராஜாவின் சாட்சியம் ஒரு மானுடப் புரிதலை ஏற்படுத்தியது. அவரது இந்த ஆதரவு 2009-க்குப் பிறகும், முள்ளிவாய்க்காலின் நீண்ட வடுக்களுக்குப் பிறகும், அவரது வாழ்வின் இறுதி ஆண்டுகள் வரை தடையின்றித் தொடர்ந்தது.

### பாக் ஜலசந்தியைக் கடந்த தமிழ் நெஞ்சம்: ஈழத்துடனான உறுதியான நட்புறவு

பாரதிராஜாவைப் பற்றி முழுமையாகப் பேசுவது என்பது அவரது அரசியல் நிலைப்பாடுகளையும் பேசுவதைக் குறிக்கிறது. அது அவரது கலைப் பயணத்தின் புறச் சேர்க்கை அல்ல; மாறாக அதன் இயல்பான நீட்சியாகும். ஈழத் தமிழர்கள் ஏதோ அண்டை நாட்டின் மக்கள் அல்ல, அவர்கள் தொப்புள்கொடி உறவுகள்; அவர்களின் போராட்டம் தமிழர்களின் போராட்டம்; அவர்களின் வேதனை தமிழர்க ளின் வேதனை என்ற உணர்வை பாரதிராஜா தனது வாழ்நாள் முழுவதும் வெளிப்படுத்தினார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடனான அவரது தொடர்பும் ஆதரவும் தற்காலிக அரசியல் சூழ்நிலைகளால் உருவானதல்ல. இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக அவர் தனது நிலைப்பாட்டை பொதுவெளியில் வெளிப் படையாகப் பதிவு செய்தார். குறிப்பாக 1991-க்குப் பின்னர், தமிழீழப் பிரச்சினையுடன் தொடர்புடைய எந்தக் கருத்தையும் வெளிப்படுத்த அரசியல் மற்றும் சமூக வட்டாரங்கள் தயக்கம் காட்டிய காலகட்டத்தில், பல கலைஞர்களும் பொது ஆளுமைகளும் மௌனமாக இருந்தபோது, அந்த மௌனத்தை உடைத்து குரல் கொடுத்தவர்களில் பாரதிராஜாவும் ஒருவராக இருந்தார். வைகோ, பழ. நெடுமாறன், சீமான் உள்ளிட்ட தமிழ்த் தேசிய உணர்வாளர்களுடன் இணைந்து, கோடிக்கணக்கான தமிழர்களின் உணர்வுகளை அவர் பொதுவெளியில் பிரதிபலித்தார்.

அவர் பல போராட்டங்களில் பங்கேற்றதுடன், திறந்த மடல்கள் எழுதியும், பொதுக்கூட்டங்களில் உரை யாற்றியும் ஈழத் தமிழர் பிரச்சினையை தொடர்ந்து முன்வைத்தார். குறிப்பாக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டு களில் இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் தமிழர் தாயகம் பேரழிவைச் சந்தித்து, முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தபோது, பாரதிராஜாவின் வேதனை ஒரு தனிநபரின் உணர்வாக மட்டும் நின்றுவிடவில்லை; அது பொதுவெளியில் ஒலித்த அரசியல் மற்றும் மனிதாபிமானக் குரலாக மாறியது.

### இராமேஸ்வரத்தில் ஒலித்த எதிர்ப்புக் குரல்

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து பாரதிராஜா வெளிப்படுத்திய உறுதியான நிலைப்பாட்டின் முக்கிய வெளிப்பாடுகளில் ஒன்றாக இராமேஸ்வரம் போராட்டம் அமைந்தது. இலங்கை யில் போர் உச்சக்கட்டத்தை எட்டியிருந்த காலத்தில், தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வந்த தாக்குதல்களைக் கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் அவர் தீவிரமாகப் பங்கேற்றார். அங்கு ஆற்றிய உரையில், ஈழத் தமிழர்களின் உயிர்களையும் உரிமைகளையும் பாதுகாக்க இந்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திய தோடு, தமிழர்களின் வேதனையைப் புறக்கணிக்கும் அரசி யல் தலைமைகளை கடுமையாக விமர்சித்தார்.

அவரது உரை வெறும் அரசியல் அறிக்கையாக இல்லாமல், இன உணர்வும் மனிதாபிமான அக்கறையும் கலந்த உணர்ச்சிபூர்வமான அழைப்பாக அமைந்தது. அந்தப் போராட்டத்தின் போது அவர் உட்பட பல தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் காவல்துறையினரால் கைது செய்யப் பட்டனர். இராமேஸ்வரத்தில் ஒலித்த அந்தக் குரல், ஈழத் தமிழர் உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்த கலைஞராக பாரதிராஜாவை மேலும் அடையாளப்படுத்தியது.

### எதிர்ப்பின் அடையாளமாக பத்மஸ்ரீ விருதைத் திருப்பியவர்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் போராட்ட மேடைகளில் மட்டுமே நின்று விடவில்லை. தனது எதிர்ப்பை இந்திய அரசுக்கு நேரடியாகப் பதிவு செய்யும் வகையில், 2009 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதைத் திருப்பி அளிக்கும் முடிவையும் அவர் எடுத்தார்.

இலங்கைத் தமிழர்கள் எதிர்கொண்ட மனிதாபிமா னப் பேரழிவுக்கு எதிராகவும், இந்திய அரசின் செயலற்ற அணுகுமுறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை, வெறும் விருதைத் திருப்பிய செயல் மட்டுமல்ல; ஈழத் தமிழர்களின் உயிர், உரிமை மற்றும் பாதுகாப்புக்காக இந்திய அரசின் கவனத்தை ஈர்க்க மேற்கொள்ளப்பட்ட அடையாள அரசியல் நடவடிக் கையாகும்.

தமிழர் இனத்தின் துயரத்தை இந்தியாவின் உயரிய குடிமக்கள் விருதுகளில் ஒன்றைத் துறப்பதன் மூலம் உலகின் கவனத்திற்குக் கொண்டுவர அவர் முயன்றார். அந்த முடிவு தமிழ்நாட்டில் பரவலான கவனத்தை ஈர்த்ததுடன், ஈழத் தமிழர் பிரச்சினை குறித்த விவாதங்களையும் தீவிரப்படுத்தியது. கலைஞராக மட்டுமல்லாது, தமிழர் இனத்தின் வலியைக் குரலாக்கிய சமூகப் பொறுப்புள்ள பொது ஆளுமையாகவும் பாரதிராஜா தன்னை நிலைநிறுத்திய முக்கிய தருணமாக அது நினைவுகூரப்படுகிறது.

### தனிப்பட்ட இழப்பும் இறுதி ஆண்டுகளும்

பாரதிராஜாவின் இறுதி ஆண்டுகள், எந்த ஒரு பொதுக் கௌரவத்தாலும் ஈடு செய்ய முடியாத ஒரு பெரும் துயரத்தால் சூழப்பட்டிருந்தன. 2025 மார்ச் மாதத்தில், அவரது மகனும், நடிகரும், இயக்குநருமான மனோஜ் பாரதிராஜா (தனது தந்தையின் 'தாஜ்மஹால்' திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர்) தனது 48-ஆவது வயதில் காலமானார். தன் உலகப் பார்வையைத் தனது கலையில் கொட்டிய ஒரு தந்தைக்கு, தன் பாதையையே தேர்ந்தெடுத்த மகனை இழப்பது என்பது ஆழமான தனிப்பட்ட வடுவாக அமைந்தது. 2025-இன் பிற்பகுதியில் அவரது உடல்நிலை நலியத் தொடங்கியது. சுவாசக் கோளாறு காரணமாகச் சென்னை யில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், வயது முதிர்ந்த காலத்திற்கே உரிய பாதிப்புகளால் மருத்துவக் கண்காணிப்பில் இருந்தார். திரையுலகினர் பலரும் அவருக்குத் தங்கள் அன்பையும் ஆதரவையும் வெளிப்படுத்தினர். ஐம்பது ஆண்டுகள் தமிழ் சினிமாவிற்குத் ஆன்மாவை ஈந்தவரைத் திரையுலகம் சூழ்ந்து நின்றது. அவர் 2026, ஜூன் 10 அன்று அதிகாலையில், தனது 84-ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

### தமிழகத்தின் துயரம்: தலைவர்களின் அஞ்சலி

அவரது மறைவுக்குத் தமிழ்நாட்டின் பல்வேறு தரப்பிலிருந்தும் இரங்கல்கள் குவிந்தன. தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், இசைஞானி இளையராஜா, கங்கையமரன், நடிகர்கள் கமல்ஹாசன், ரஜினிகாந், சூர்யா, சிவகுமார், மற்றும் கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர், இன்னும் மற்றும் பலர் அவரது சென்னை இல்லத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். தெலுங்குத் திரையுலகின் சிரஞ்சீவி மற்றும் பவன் கல்யாண் ஆகியோர் இந்திய சினிமாவிற்கு இது ஒரு பேரிழப்பு என்று தங்களது இரங்கலைத் தெரிவித்தனர். ஆந்திரா முதல் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் வரை தங்களது ஆழ்ந்த இரங்கலை வெளிப்படுத்தினர்.

தமிழ்நாடு அரசு அவருக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகளை நடத்தியது. அவரது உடல் இறுதிச் சடங்கிற்காக 2026, ஜூன் 11 அன்று அவரது சொந்த ஊரான தேனிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவர் நேசித்த தமிழ் மண்ணில் விதைக்கப்பட்டது.

அவரது நட்புறவை என்றும் மறவாத ஈழத் தமிழர்களிடமிருந்து வந்த இரங்கல்கள் தனித்துவமான மதிப்பைக் கொண்டிருந்தன—ஒரு இந்தியப் பொது ஆளுமை தங்களுக்கு ஆதரவாக நிற்பதற்கு என்னென்ன விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், அந்த விலையைப் பாரதிராஜா எவ்விதப் புகாருமின்றிச் செலுத்தினார் என்பதை அவர்கள் நன்றியோடு நினைவுகூர்ந்தனர்.

### மரபு: அவர் விட்டுச்சென்ற மண்

பாரதிராஜாவிற்குப் பிந்தைய தமிழ் சினிமா என்பது கிராமிய வாழ்வியலுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்ட ஒன்றாக மாறியிருக்கிறது. சாதியம், வர்க்கம் மற்றும் கிராமப்புற அனுபவங்களை முதன்மைப்படுத்தும் இன்றைய தலைமுறை இயக்குநர்கள், 16 வயதினிலே படத்தின் மூலம் பாரதிராஜா அமைத்துக் கொடுத்த பாதையில்தான் பயணிக்கிறார்கள். அவர்கள் எப்போதும் அவரது பெயரைச் சொல்லாமல் இருக்கலாம், ஆனால் நிஜமான தமிழ் சூரிய வெளிச்சத்தில் எடுக்கப்படும் ஒவ்வொரு காட்சியும், எளிய மக்களின் கதைகளும் அவரது மரபையே சுமந்து நிற்கின்றன.

அவர் எந்த ஒரு விருதிற்கும் அப்பாற்பட்ட ஒரு முன் மாதிரியை விட்டுச் சென்றுள்ளார்: ஒரு கலைஞன் என்பவன் தன் மக்களோடு ஒன்றிணைந்தவன் என்பதே அது. பாரதிராஜா தனது கலையைத் தன் மக்களிடமிருந்து பிரிக்கவில்லை. அவர் தமிழ் உலகை ஒன்றாகவே கண்டார்—அது எல்லைகளால் பிரிக்கப்பட்டிருந்தாலும், ஒரு போரினால் சிதைக்கப்பட்டிருந்தாலும், மொழி, பண்பாடு மற்றும் பகிரப்பட்ட மானுடத்தால் அது ஒன்றுபட்டே இருக்கிறது என்பதைத் தனது சினிமா மூலம் உணர்த்தினார்.

அவரது “என் இனிய தமிழ் மக்களே” என்ற சொற்றொடர் வெறும் வெற்று முழக்கமல்ல. அது ஒரு தொப்புள்கொடி உறவின் பிரகடனம். அதை அவர் சொல்லும் போதெல்லாம், கதைசொல்லிக்கும் மக்களுக்குமான உறவு வணிக ரீதியானது அல்ல, அது புனிதமானது என்பதை நினைவூட்டினார். அவர் அவர்களில் ஒருவராக இருந்தார்; அவர்களின் கதைகளைச் சொன்னார்; அவர்களுக்குக் கடமைப்பட்டவராக இருந்தார். அந்தக் கடமைப்பாடு, அரசியல் துணிச்சலின்றிப் பேச முடியாத, எல்லைகளுக்கு அப்பால் வாழும் ஈழத் தமிழர்களுக்கும் பொருந்தும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் கிளிநொச்சிக்குச் சென்றார், தேசியத் தலைவர் பிரபாகரனுடன் அமர்ந்தார், சாட்சியமளித்தார், தாயகம் திரும்பி உண்மையை உரக்கச் சொன்னார்.

### ஒளியாக வழிகாட்டும்

தேனியின் நெல்வயல்கள் மீண்டும் அறுவடைக் காலத்தில் பொன்னிறமாக மாறும். தமிழீழத்தின் செம்மண் சாலைகள் தங்களை நம்பிக்கையோடு கடந்த மனிதர்களின் நினைவுகளைத் தாங்கி நிற்கும். அவற்றுக்கு இடையில்—தமிழர்களின் நெஞ்சங்களில்—பாரதிராஜா என்றும் அழியாப் புகழுடன் நிலைத்திருப்பார். அவர் ஒரு குறையற்ற மனிதர் அல்ல, குறையற்றவர் என்று சொல்வது அந்த மனிதரின் உண்மை வாழ்விற்குச் செய்யும் மரியாதையாகாது. ஆனால் அவர் தன் கொள்கையில் உறுதியான மனிதராக இருந்தார்—தனது கலைக்கு, தனது மக்களுக்கு, தான் உணர்ந்த உண்மைக்கு உண்மையாக இருந்தவர்.

தமிழ் சினிமா அவரை என்றும் நினைவுகூரும். ஆனால், அதைவிட ஆழமான துயரம் தமிழ் மக்களுக்குரியது—ஒரு சுகாதார ஆய்வாளராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி, பின்னாளில் புகழ்பெற்ற இயக்குநராக உயர்ந்த ஒரு மனிதனைத் தங்கள் சொந்த சகோதரனாகக் கண்ட மக்கள் அவர்கள்; தங்களைப் படமாக்கிய, தங்களோடு நின்ற, என்றும் முகம் திருப்பாத ஒரு மனிதனை அவர்கள் இழந்து நிற்கிறார்கள்.

பாரதிராஜா அவர்கள் விட்டுச்சென்ற கலைப் பேரரசை விடவும், அவர் ஒவ்வொரு முறை மேடை ஏறும்

தொடர்ச்சி: பக்கம் 17




வேல்ஸில் இருந்து **அருஸ்**

இந்த வாரம் முழுவதும் அமெரிக்காவும் ஈரானும் இரவோடு இரவாக ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டன. அமெரிக்கா, ஹோர்முஸ் நீரிணைக்கு அருகிலுள்ள ஈரானின் வான் பாதுகாப்பு, ரேடார் மற்றும் கட்டளைத் தளங்களைத் தாக்கியது. ஈரான், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க இலக்குகள் மீது ஏவுகணைகளையும் ஆளில்லா விமானங்களையும் ஏவியது. காலையில், தனது நடவடிக்கை முடிந்துவிட்டதாக அமெரிக்கா கூறியது. பஹ்ரைன் மற்றும் ஜோர்டானில் உள்ள அமெரிக்கப் படைகளைத் தாக்கியதாக ஈரான் உரிமை கோரியது.



ஜூன் 8 அன்று, லெபனானில் நடந்த தாக்குதல்களுக்குப் பதிலடியாக, இஸ்ரேல் மீது ஒரு தாக்குதலை நடத்த ஈரான் முடிவு செய்தது. அதாவது ஈரான் கூறிவந்த சிவப்புக் கோட்டை நினைவுபடுத்த வேண்டிய தேவை ஈரானுக்கு இருந்தது.இஸ்ரேலில் உள்ள ரமத் டேவிட் விமானத்தளத்தின் மீது குறைந்தபட்சம் ஒரு ஈரானிய ஏவுகணை தாக்கியது உறுதி செய்யப்பட்டது.




இந்த தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்க வேண்டாம் என அமெரிக்க அதிபர் இஸ்ரேலிய பிரதமர் நெத்தனியாகுவை கேட்டபோதும், இஸ்ரேல் ஈரானின் இலக்குகளைத் தாக்கியது. ஆனால் இந்த முறை அதிகளவில் ரொமகவ் ஏவுகணைகளையே அது பயன்படுத்தியிருந்தது. வான்படையின் விமானங்களின் பயன்பாடு குறைவாகவே இருந்தது. அதாவது ஈரானின் வான்பாதுகாப்பு ஏவுகணைகளின் அச்சம் அவர்களுக்கு உண்டு.நெதன்யாகு சிறைக்குச் செல்லாமல் இருப்பதற்காக, அவர் தொடர்ந்து நடத்த வேண்டிய ஒரு போரின் இலக்குகள் அவை. ஒரு மேம்பட்ட சமாதானத் திட்டம் உள்ளது என்ற கதையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, கேமராக்களுக்கு முன்னால் நெதன்யாகுவைக் கட்டுப்படுத்தும் டிரம்பின் பாவனை ஒரு நாடகத்தைத் தவிர வேறொன்றுமில்லை. எனினும் ஈரான் மீண்டும் பதிலடி கொடுத்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் தலையிட்டு இஸ்ரேலின் தாக்குதலை முடிவுக்கு கொண்டுவந்திருந்தார்.


உண்மையில், கடுமையான தாக்குதல்களை நடத்துவதற்கு இது சரியான நேரம் என்று ட்ரம்ப் நினைக்கவில்லை, மேலும் பதிலடி கொடுக்கத் தவறினால் தனது செல்வாக்கிற்கான பிரச்சினைகள் மேலும் ஆழமாகும் என்பதை நெதன்யாகு அறிந்திருந்தார். நெதன்யாகுவின் தாக்குதலுக்குப் பிறகு, டிரம்ப், ஒரு ஹெலிகாப்டரை இழந்ததாகக் கூறி, ஈரான் மீது தாக்குதல் நடத்த முடிவு செய்திருந்தார்.




இந்த சம்பவம்சில மணி நேரங்களுக்கு முன்பு அவர் கண்டனம் தெரிவித்த அதே களத்தில் அவரை நிறுத்தியது. இந்தத் தாக்குதலுக்கான காரணம் என்ன? போர்நிறுத்தம் முழுவதும் நிகழ்ந்து வரும் ஒரு விஷயம்: பாரசீக வளைகுடாவில் சில IRGC கடற்படையின் அதிவேகப் படகுகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அமெரிக்கக் கடற்படை அப்பாச்சி ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தி அவற்றைக் குறிவைக்க முயன்றதாகக் கூறப்படுகிறது. இதற்குப் பதிலடியாக, தரை-வான் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட பல படகுகள் அந்த ஹெலிகாப்டர்களைத் தாக்கின.

ஒன்றுக்கும் மேற்பட்ட ஹெலிகாப்டர்கள் தாக்கப்பட்டன, ஆனால் அப்பாச்சி ஏ.எச்-64 ரகத்தை சேர்ந்த ஒன்று மட்டுமே சுட்டு வீழ்த்தப்பட்டது. இதுவரை அமெரிக் கட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு வந்தன, அதன் பின்னர் அமெரிக்காஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தும் ஒரு யோசனையைக் கொண்டு வந்தது.விமான எதிர்ப்பு அமைப்புகளைக் கொண்ட சில அதிவேகப் படகுகளை எதிர்கொள்ள ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தினால், ஹெலிகாப்டர்களை இழக்கும் வாய்ப்பும் உள்ளது என்பது வெளிப்படை. உலங்குவானூர்தியில் இருந்த படையினரை வரலாற்றில் முதல் முறையாக ஆளில்லாத படகு மூலம் அமெரிக்கா மீட்டிருந்தது.

வான்கலத்தின் இழப்புக்கு பதிலடியாகடிரம்ப் ஈரானில் 20-க்கும் மேற்பட்ட இலக்குகள் மீது குண்டுவீச்சு நடத்தினார். முக்கியமாகக் கடற்கரைப் பகுதிகளைக் குறிவைத்தாலும், நாட்டின் உட்பகுதியில் உள்ள பல இலக்குகளும் தாக்கப்பட்டன. ஈரான் பதிலடி கொடுத்தது. அது அதிக எண்ணிக்கையிலான ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் பயன்படுத்தாவிட்டாலும், மேம்படுத்தப்பட்ட சில ஏவுகணைகளைப் பயன்படுத்தி முக்கியமான இலக்குகளைத் தாக்கியது. இது, திட்டமிட்டபடி தாக்குதலைத் தொடர்வதா வேண்டாமா என்பதை சென்ட்காம் (CENTCOM) மறுமதிப்பீடு செய்ய வழிவகுத்தது.





கடலோர நிலைகள், சேவைப் பிரிவுகள், காவல் பகுதிகள் மற்றும் பந்தர் அப்பாஸ் விமான நிலையம் ஆகியவற்றின் மீதான அமெரிக்கத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, அலி அல் சலேம், அஹ்மத் அல் ஜாபர் மற்றும் ஷேக் ஈசா விமானப்படைத் தளங்களில் உள்ள 18 அமெரிக்க இலக்குகளை இரண்டு கட்டங்களாகத் தாக்கியதாகவும் ஈரான் கூறுகிறது.





உதாரணமாக, ஜோர்டானில் உள்ள முவஃபாக் சால்டி விமானத்தளத்தின் மீது ஏவப்பட்ட ஏவுகணைகள்அவற்றின் இலக்குகளைத் தாக்கியதாகத் தெரிகிறது. மேலும், அந்த வெடிப்புகள் மிகவும் சக்திவாய்ந்தவையாக இருந்ததால், அதன் எதிரொலிகள் சுமார் 200 கி.மீ தொலைவில் உள்ள மேற்குக் கரை மற்றும் ஜெருசலேம் வரை கேட்டன.ஜோர்டானில் உள்ள முவஃபாக் அல் சால்டி விமானப்படைத்

**தொடர்ச்சி: பக்கம் 15**





# ரஷ்யா யாருக்கும் எதற்கும் கடன்பட்டிருக்கவில்லை

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளுடனான ரஷ்யாவின் உறவுகளில் உள்ள அடிப்படைப் பிரச்சனைகளில் ஒன்று, மாஸ்கோ தனது அண்டை நாடுகளுக்குச் சில சிறப்பு கடமைகளைக் கொண்டுள்ளது என்ற தொடர்ச்சியான நம்பிக்கையாகும்: அதாவது, அவர்களின் நடத்தையைத் தாராளமாகப் புரிந்துகொள்வது, நிதானத்துடன் பதிலளிப்பது, மற்றும் அவர்களின் உள்நாட்டு அரசியல் தேர்வுகளைத் தான் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாகக் கருதுவது போன்ற கடமைகள்.



ஆனால் இந்த அனுமானம் தவறானது. ஆர்மீனியா குடியரசு தேர்ந்தெடுக்கும் வெளியுறவுக் கொள்கைப் பாதை, நிச்சயமாக, அதன் மக்களுக்கும் தலைமைக்கும் உரிய ஒரு இறையாண்மை சார்ந்த விஷயமாகும். ஆனால், அந்தத் தேர்வுக்கு முற்றிலும் தனது சொந்த விருப்பப்படி பதிலளிப்பதற்கு ரஷ்யாவிற்கு இறையாண்மை உரிமை இல்லை என்று கற்பனை செய்வது விசித்திரமாக இருக்கும். மற்றவர்கள் விரும்பும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும் என்ற எந்த வெளிப்புறக் கடமையும் மாஸ்கோவிற்கு இல்லை. அது தனது சொந்த நலன்களாலும், சூழ்நிலையைப் பற்றிய தனது பகுத்தறிவு மதிப்பீட்டாலும் மட்டுமே கட்டுப்படுத்தப்படுகிறது.

இந்த வகையில், ஆர்மீனியாவின் தேர்தல்களைச் சுற்றியுள்ள சர்ச்சையும், குடியரசின் ‘ஐரோப்பியத் தேர்வு’ என்று அழைக்கப்படும் பரந்த விவாதமும், மாஸ்கோவின் உரிமைகள் ரஷ்யாவின் நண்பர்களுக்கும் அண்டை நாடுகளுக்கும் உள்ள உரிமைகளிலிருந்து வேறுபட்டவை அல்ல என்பதை நினைவூட்டுவதற்கு ஒரு பயனுள்ள தருணத்தை வழங்கக்கூடும். உண்மையில், நடைமுறையில் அவை மிகப் பெரியவை. ஏனெனில், பெரும் யூரேசியா முழுவதிலும், இன்னும் பரந்த அளவில் உலக அளவிலும், வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான மிகப் பெரும் பொறுப்பை ரஷ்யா கொண்டுள்ளது.



தொடக்கத்திலிருந்தே நாம் தெளிவாக இருக்க வேண்டும். ஆர்மீனியாவின் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மற்றும் அதைத் தொடர்ந்து யெரெவான் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் மீதான ரஷ்யாவின் எதிர்வினை, உணர்ச்சிகளால் உந்தப்பட வேண்டியதில்லை. அதுபோலவே, எந்த விலை கொடுத்தாவது ஆர்மீனியாவை ரஷ்யாவின் செல்வாக்கு மண்டலத்திற்குள் வைத்திருக்க வேண்டும் என்ற விருப்பத்தாலும் அது வழிநடத்தப்பட வேண்டியதில்லை.

நமது எதிரியான ஜார்ஜ் கென்னன் 80 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது போல, ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கை “திட்டமிட்டதோ அல்லது சாகசமானதோ அல்ல. அது நிலையான திட்டங்களால் செயல்படுவதில்லை. அது தேவையற்ற அபாயங்களை மேற்கொள்வதில்லை.” இன்றைய ரஷ்யா சோவியத் யூனியனாக இல்லாவிட்டாலும், அது ஒரு பயனுள்ள அவதானிப்பாகவே உள்ளது.

ஆர்மீனியா மற்றும் அதன் எல்லைகளிலுள்ள ரஷ்யாவின் அனைத்து அண்டை நாடுகளை நோக்கிய பொருத்தமான உத்தியைக் கருத்தில் கொள்ளும்போது, பல தேர்வுகள் சாத்தியமாகும். அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல.



முதலாவதாக, ஒரு அண்டை நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கமோ அல்லது வெற்றியை அறிவித்த அரசியல் சக்தியோ வற்புறுத்துவதால் மட்டுமே, அந்நாட்டின் தேர்தல் முடிவுகளை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ரஷ்யா உள்ளாகாது. மக்கள் வாக்கெடுப்பின் அதிகாரப்பூர்வ முடிவுகளை அங்கீகரிப்பது ஒருபுறம் இருக்க, தூதரக உறவுகள் இல்லாத நிலையிலும்கூட, முற்றிலும் ஆரோக்கியமான வர்த்தக மற்றும் பொருளாதாரத் தொடர்புகள் நிலவ முடியும் என்பதை ஜார்ஜியாவின் உதாரணம் காட்டுகிறது.

குறிப்பாக, ஆர்மீனியாவில் நிகழ வாய்ப்புள்ளது போல, அந்தத் தேர்தல் முடிவுகள் உள்ளூர் அரசியல் சக்திகளால் கடுமையாக எதிர்க்கப்படும் பட்சத்தில் இது மிகவும் பொருத்தமானதாகிறது.



இரண்டாவதாக, ஒரு நாட்டின் நடத்தை ரஷ்ய நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று ரஷ்யா நம்பினால், அது அந்த நாட்டின் மீது பொருளாதார அழுத்தத்தைப் பிரயோகிக்கலாம். சேதம் சரிசெய்ய முடியாததாக மாறும் வரை மாஸ்கோ காத்திருக்க வேண்டிய அவசியமில்லை; அல்லது மற்றொரு அரசாங்கத்தின் நோக்கங்கள் குறித்த உறுதிமொழிகளை அது ஏற்க வேண்டிய அவசியமும் இல்லை.

ஆர்மீனியாவைப் பொறுத்தவரை, ஐரோப்பிய ஒன்றிய சார்புப் போக்கு ஏற்கனவே ரஷ்ய நலன்களுக்குத் தீங்கு விளைவித்துள்ளதா அல்லது யூரேசியப் பொருளாதார

தமிழில்: ஆர்தீகன்

ஒன்றியத்தின் ஒற்றுமையைக் குலைத்துவிட்டதா என்பது மட்டுமல்ல கேள்வி. கொள்கையளவில் அத்தகைய தீங்கு சாத்தியம் என்று மாஸ்கோ கருதுவதே போதுமானது, அதுவே நடவடிக்கைக்கான நியாயத்தை வழங்கக்கூடும்.

மாறாக, சிஐஎஸ்-இல் உள்ள ரஷ்யாவின் நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் முழு வெளியுறவுக் கொள்கை சொல்லகராதியிலும் “நடைமுறைவாதம்” என்ற சொல் மையமாகிவிட்டது.

அவர்கள் ரஷ்யாவுடன் ஒத்துழைப்பது அவர்களின் நலன்களுக்கு உகந்தது என்பதால், அது முற்றிலும் புரிந்துகொள்ளக்கூடியதே. ஆனால் இதே கொள்கை தலைகீழாகவும் பொருந்தும், மேலும் ரஷ்யா யாருக்கும் இலவசமாக எதையும் வழங்கக் கடமைப்பட்டிருக்கவில்லை.

நான்காவதாக, எந்தவொரு நாட்டுடனும் ஒத்துழைப்பதற்கான முன்னுரிமைகளை நிர்ணயிக்கும்போது, தனக்கு எது மிகவும் முக்கியமானது என்பதைத் தீர்மானிக்க ரஷ்யாவுக்கு முழு சுதந்திரம் உள்ளது. அதன் அண்டை நாடுகள் தங்களின் சொந்தக் கண்ணோட்டங்கள், நலன்கள் மற்றும் அரசியல் கட்டமைப்புகளால் வழிநடத்தப்படுகின்றன. உரையாடலுக்கான கட்டமைப்பாக இவற்றை ஏற்றுக்கொள்ள மாஸ்கோவில் உள்ள எவருக்கும் கடமை இல்லை.



மத்திய ஆசியாவை எடுத்துக்கொள்வோம். அப்பிராந்தியத்தின் நாடுகளுடன் நாம் எவ்வளவு அடிக்கடி பொருளாதார வளர்ச்சி குறித்து விவாதித்தாலும், அங்கு பாதுகாப்பே முக்கிய முன்னுரிமையாக உள்ளது என்பதை ரஷ்யாவில் உள்ள அனைவரும் புரிந்துகொள்கிறார்கள். எங்களுக்கு அனுபவம் உண்டு, ஏனெனில், ஜனவரி 2022-இல், கஜகஸ்தான் அரசு வீழ்ச்சியடைவதிலிருந்து காப்பாற்ற ரஷ்யா உதவியது. அதற்கு முன்பு, ஃபெர்கானா பள்ளத்தாக்கில் இஸ்லாமிய எழுச்சிகளை நாங்கள் கண்டோம்.

இதன் அர்த்தம் பொருளாதாரம் முக்கியமற்றது என்பதல்ல. அது மிகவும் முக்கியமானது, மேலும் அது உண்மையான நன்மைகளைத் தருகிறது மற்றும் குறிப்பிடத்தக்க நம்பிக்கையை அளிக்கிறது. ஆனால், பாதுகாப்புதான் முதன்மையான முன்னுரிமையாக உள்ளது; குறிப்பாக, ரஷ்யாவின் அண்டை நாடுகள் அமெரிக்கா அல்லது முன்னணி மேற்கு ஐரோப்பிய நாடுகள் போன்ற முக்கிய வெளி சக்திகளுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளும்போது இது மிகவும் முக்கியம்.

ரஷ்யாவால் இவ்வாறு சிந்திக்க முடிகிறது, ஏனெனில் அது யூரேசியாவிலேயே வளங்கள் மிகவும் பாதுகாப்பாக உள்ள நாடாகும். எனவே, அது லாபத்தில் குறைவாகக் கவனம் செலுத்தி, தனது சொந்தப் பாதுகாப்பிற்குத் தேவையான வளங்கள் மற்றும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தின் மீதான கட்டுப்பாட்டைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்த முடிகிறது. ஏனெனில், ரஷ்யப் பிரதேசத்

தொடர்ச்சி: பக்கம் 15

## ரஷ்யா யாருக்கும் ... தொடர்ச்சி...

தின் பாதுகாப்பு மிக முக்கியமானது.

இதன் பொருள், ரஷ்யா இப்போது தனது அண்டை நாடுகளை நோக்கி ஏதேனும் ஒரு மாபெரும் புதிய கொள்கையை வகுக்க வேண்டும் என்பதல்ல. உண்மையில், ரஷ்யாவின் உத்தி என்பது பெரும்பாலும் எந்தவொரு நிலையான உத்தியும் இல்லாமல் இருப்பதே ஆகும். ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கை வரலாற்றைப் பற்றி ஓரளவு அறிந்த எவரும் புரிந்துகொள்வது போல, மாஸ்கோ தற்போதைய நலன்களுக்கு ஏற்பவே செயல்படுகிறது.

இறுதியில், அந்த நலன்கள் அனைத்தும் ஒரே ஒரு மூலோபாயப் பணியில் வந்து முடிகின்றன: பல்லின ரஷ்ய தேசத்தின் உயிர்வாழ்வையும் வளர்ச்சியையும் உறுதி செய்வது.

தந்திரோபாய சூழ்நிலைகள் மிகவும் விரும்பத்தகாத கூட்டாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தாலும் கூட, இந்த நலன்கள் தொடரப்பட வேண்டும். சாராம்சத்தில், அனைத்து வெளியுறவுக் கொள்கைக் கூட்டாளிகளும் ரஷ்யப் பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ரஷ்யாவின் தேசிய வளர்ச்சி இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆன வெறும் கருவிகளே தவிர வேறொன்றுமில்லை.

இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு பெலாரஸ் மட்டுமே; ரஷ்யா அதனுடன் ஒன்றிய அரசு ஒப்பந்தத்தால் பிணைக்கப்பட்டுள்ளது.

மற்றவர்களைப் பொறுத்தவரை, நெருங்கிய மற்றும் நட்பான அண்டை நாடுகள் உட்பட, அவற்றின் முக்கியத்துவம் ரஷ்யாவின் சொந்த முன்னுரிமைகளைப் பொறுத்தது. இதன் பொருள், அவர்களை நோக்கிய மாஸ்கோவின் கொள்கை மிகவும் நெகிழ்வானதாகவும், முற்றிலும் சந்தர்ப்பவாதமாகவும் இருக்க முடியும், மேலும் இங்கு அருவமான கொள்கைகளுக்கு அதிக இடமில்லை.

ஒத்துழைப்பு ரஷ்யாவின் தற்போதைய பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களுக்கு உகந்ததாக இருந்தால், அது தொடர வேண்டும். ஆனால், அதன் நன்மைகள் செலவுகளை விட அதிகமாகத் தொடங்கினால், ரஷ்யா தனது போக்கை மாற்றியமைத்துக் கொள்ளும். அது ஒரு அண்டை நாட்டைத் தண்டிப்பதற்காகவோ அல்லது அவமானப்படுத்துவதற்காகவோ அல்ல, மாறாக ஒரு மாற்று மாதிரி அதிக சாதகமாக மாறியுள்ளதால்தான்.

எனவே, ஆர்மீனியாவின் தேர்தலில் இப்போது வெற்றியைப் பிரகடனப்படுத்துபவர்களைப் பற்றிய மாஸ்கோவின் பார்வையை, அந்தக் குடியரசை ரஷ்யாவின் செல்வாக்கு மண்டலத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற ஒரு எளிய விருப்பமாகப் புரிந்துகொள்வது தவறாகும். ஏனெனில், இந்தப் பிரச்சினை அதை விடப் பரந்ததாகும்.

ரஷ்யா தனது அண்டை நாடுகளுக்குக் காரணம் மற்றும் விளைவு பற்றி நினைவூட்டுகிறது. மேலும், அவர்கள் சில சமயங்களில் ஒப்புக்கொள்ள விரும்பாத ஒரு அடிப்படை உண்மையையும் அவர்களுக்கு நினைவூட்டுகிறது. அதாவது, மாஸ்கோ மற்றவர்கள் தன்னிடம் எதிர்பார்ப்பதன்படி செயல்படாமல், தற்போது தனது சொந்த நலன்களாகக் கருதுபவற்றின்படியே செயல்படுகிறது என்பதே அந்த அடிப்படை உண்மை.

ஆர்மீனியாவின் நாடாளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து மாஸ்கோவிற்கும் யெரெவானுக்கும் இடையிலான உறவுகள் எவ்வாறு உருவாகும் என்பதை நம்மால் இன்னும் கூற முடியாது. ஆனால், ரஷ்யாவின் உயர்மட்ட அரசியல் தலைமை எடுக்கும் எந்தவொரு முடிவும் ரஷ்யாவின் தற்போதைய நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதில் யாரும் சந்தேகம் கொள்ளக் கூடாது.

சகோதர பாசத்தின் அடிப்படையிலோ, வரலாற்றுப் பற்றுதலின் அடிப்படையிலோ, பாரம்பரியப் பிணைப்புகளின் அடிப்படையிலோ அல்ல ஏனெனில் ரஷ்யா யாருக்கும் எதையும் கடன்பட்டிருக்கவில்லை.

**நன்றி: ரஸ்ய ரூடே**

## வடமாகாண பெண்கள் ... தொடர்ச்சி...

இவை முன்னெடுக்கப்படுகின்றன. தொழில் வாண்மைகளுக்கு உதவும் நோக்கில் இன்னும் பல செயற்றிட்டங்களும் வழிகாட்டல்களும் முன்னெடுக்கப்பட வேண்டும். வணிக கடன்கள், வணிக சொத்துகள் வாங்குவதற்கான கடன்கள் என்பவை வழங்கப்படுகின்றன எனினும் அவற்றில் உள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் போதே, பலருக்கு இவற்றின் பயனை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

மேல் மாகாண, கிழக்கு மாகாண தொழில் முயற்சியாளர்களான சிவானி, சிந்து,நேருஜா, ஜெசிக்கா ஆகியோர் தமது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

**“உங்கள் வியாபாரம் என்பது உங்கள் தனித்துவம்”**
**“பார்தத உடனே விளங்க வேண்டும் “**
**“மொழிப்பிரச்சனையை கையாளத் தெரிய வேண்டும்”**
**“தொழிநுட்பத்தைப் பயன்படுத்துதல்”**
**“வாடிக்கையாளர் நம்பிக்கையை தீர்மானிப்பது பொருட்களின் தரம்தான், அது எப்போதும் சரியானதாக இருக்கவேண்டும்”**
**“நம்பிக்கையை உடைக்காமல் இருத்தல் வேண்டும்”**
**“மாறாத தரமுடையதாக உற்பத்திப் பொருட்கள் இருக்க வேண்டும்”**
**“இலக்கு ஒன்று இருக்க வேண்டும் வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப உற்பத்தி செய்ய வேண்டும் “**
**“முதலீடு எந்த அளவு என்பது விசயம் இல்லை, எங்கு போக வேண்டும் என்பதுதான் விசயம் “**
**“சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும், கையில் இருக்கும் வாய்ப்பாளர்களைப் பயன்படுத்த வேண்டும்”**
**“ குடும்பத்தை எங்களுக்கு ஏற்றவாறாக ஒத்துழைக்கும் வகையில் தயார்படுத்த வேண்டும்”**

ஆகிய கருத்துகள் தொடர்பில் அவர்களால் விளக்கமளிக்கப்பட்டன. மதிய உணவுக்குப் பின்னர், தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது.

தொழில் முயற்சியாளர்களாகச் செயற்படும் பெண்கள் பற்றிய அநேக விடயங்களை அறிந்து கொள்ள அன்றைய உச்சி மாநாடு - 2026 உதவியது என்றால் மிகையல்ல.

## யாழ்ப்பாணத்தில் இந்தியத் ... தொடர்ச்சி...

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வந்த புதிய சத்திரசிகிச்சைப் பிரிவின் முன்னேற்றத்தை பார்வையிட்டார். அதனை விட இந்திய அரசாங்கத்தால் வீடற்ற குடும்பங்களுக்காக முன்னெடுக்கப்பட்ட பூர்த்தி செய்யப்படாமல் உள்ள மாதிரி கிராம வீட்டுத் திட்டங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அபிவிருத்திக்காக இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்காக பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டாலும் மாகாணசபை தேர்தல் தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதில் நெகிழ்வுத்தன்மையை கடைப்பிடிப்பதையே காணமுடிகிறது.

## பென்-க்விர் மீது இத்தாலி ... தொடர்ச்சி...

தேவைப்படுகின்றன. அதன் சுமார் 2.1 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் மீது இஸ்ரேல் பலமுறை மிகவும் கடுமையான அணுகுமுறையைக் கையாண்டு வந்தாலும், பென்-க்விர் என்பவரின் செயல்களால் இந்த சமீபத்திய சம்பவம் மேலும் மோசமடைந்தது. கைதிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைக் கப்பலுக்கு அந்த அமைச்சர் ஒரு பெரிய இஸ்ரேலியக் கொடியை அசைத்தபடி வந்து, மண்டியிட்டுக் கட்டப்பட்டிருந்த ஆர்வலர்களைக் கேலி செய்து, அவர்களை நீண்ட காலம் சிறையில் அடைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினார். அவர் அந்த காணொளியையும் இணையத்தில் பதிவிட்டார்.

இந்தச் செயல் பென்-க்விர்க்கு பரவலான சர்வதேச கண்டனத்தையும், உள்நாட்டில் சில விமர்சனங்களையும் பெற்றுத் தந்தது. “பிரெஞ்சு மற்றும் ஐரோப்பியக் குடிமக்களுக்கு எதிரான அவரது கண்டிக்கத்தக்க செயல்களை” காரணம் காட்டி, பிரான்ஸ் அவருக்கு நாட்டிற்குள் நுழையத் தடை விதித்தது. போலந்தும் அமைச்சருக்குப் பயணத் தடை விதித்தது. அதே நேரத்தில், கடந்த வாரம் அயர்லாந்து, ஃப்ளோட்டிலா விவகாரம் மற்றும் பாலஸ்தீன எதிர்ப்புக் கருத்துக்கள் காரணமாக, பென்-க்விர் மற்றும் தீவிர வலதுசாரி நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச் ஆகிய இருவரையும் நாட்டிற்குள் நுழையத் தடை செய்தது.

இந்தப் பகுதிக்கு மனிதாபிமான உதவிகள் மிகவும் அவசியமாகத் தேவைப் படுகின்றன. அதன் சுமார் 2.1 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் இடம்பெயர்ந்துள்ளனர். இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் மீது இஸ்ரேல் பலமுறை மிகவும் கடுமையான அணுகுமுறையைக் கையாண்டு வந்தாலும், பென்-க்விர் என்பவரின் செயல்களால் இந்த சமீபத்திய சம்பவம் மேலும் மோசமடைந்தது. கைதிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைக் கப்பலுக்கு அந்த அமைச்சர் ஒரு பெரிய இஸ்ரேலியக் கொடியை அசைத்தபடி வந்து, மண்டியிட்டுக் கட்டப்பட்டிருந்த ஆர்வலர்களைக் கேலி செய்து, அவர்களை நீண்ட காலம் சிறையில் அடைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினார். அவர் அந்த காணொளியையும் இணையத்தில் பதிவிட்டார்.

இந்தச் செயல் பென்-க்விர்க்கு பரவலான சர்வதேச கண்டனத்தையும், உள்நாட்டில் சில விமர்சனங்களையும் பெற்றுத் தந்தது. “பிரெஞ்சு மற்றும் ஐரோப்பியக் குடிமக்களுக்கு எதிரான அவரது கண்டிக்கத்தக்க செயல்களை” காரணம் காட்டி, பிரான்ஸ் அவருக்கு நாட்டிற்குள் நுழையத் தடை விதித்தது. போலந்தும் அமைச்சருக்குப் பயணத் தடை விதித்தது. அதே நேரத்தில், கடந்த வாரம் அயர்லாந்து, ஃப்ளோட்டிலா விவகாரம் மற்றும் பாலஸ்தீன எதிர்ப்புக் கருத்துக்கள் காரணமாக, பென்-க்விர் மற்றும் தீவிர வலதுசாரி நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச் ஆகிய இருவரையும் நாட்டிற்குள் நுழையத் தடை செய்தது.

## அமெரிக்காவுக்கு கடுமை ... தொடர்ச்சி...

தளத்தில் தரையில் இருந்த F-35, F-15 மற்றும் F-16 ரக விமானங்களைக் குறிவைத்து 12 பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியதாக ஐ.ஆர்.ஜி.சி. கூறுகிறது.

ஜோர்டானில் உள்ள முவஃபாக் அல்-சல்தி விமானப் படைத் தளத்தில், மோதல் தடங்கள் ஏற்பட்டிருப்பதை சோர் அட்லஸ் எடுத்த செயற்கைக்கோள் படங்கள் காட்டுவதாகத் தெரிகிறது.

40 நாள் போரில், இதே தளத்தைத் தாக்குவதில் ஈரான் பெரும் சிரமத்தை எதிர்கொண்டது. ஏராளமான அமெரிக்க ரேடார்களை அழித்து, ஒரு வழித்தடத்தைத் திறந்த பின்னரே, ஜோர்டானில் உள்ள இலக்குகளுக்கு எதிரான தனது முடிவுகளை மேம்படுத்த முடிந்தது.

இந்த முறை, ஈரான் நீண்ட தூர ரேடார்களையும் குறிவைக்கத் தொடங்கியது. பஹ்ரைனில் உள்ள முக்கிய ரேடார் தளங்களில் ஒன்றான ஜபல் அல்-துக்கான் நீண்ட தூர ரேடார் தளத்தை (AR 327) அது அழித்தது.

ஈரான் சமீபத்தில் தாக்கிய ஜோர்டானில் உள்ள அமெரிக்க தளமான அஸ்ராக் தளம் (முவஃபாக் சால்டி விமானத் தளம் என்றும் அழைக்கப்படுகிறது) என்பது அம்மான் நகருக்கு கிழக்கே சுமார் 100 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஒரு கூட்டு அமெரிக்க-ஜோர்டான் தளமாகும். பிப்ரவரியில், செயற்கைக்கோள் படங்கள் 30 F-35 ரக விமானங்களும் 36 F-15 ரக விமானங்கள் நிற்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. உட்பட 60-க்கும் மேற்பட்ட அமெரிக்க ஜெட் விமானங்களை காட்டின. இந்தத் தளம் 332-வது விமானப் பயணப் படையை (F-15E, MQ-9 ரீப்பர்) கொண்டுள்ளது, மேலும் F-35 ரக விமானங்கள் சுழற்சி முறையில் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. 15 ஆண்டு கால ஒப்பந்தத்தின் கீழ், அமெரிக்கா முழுமையான செயல்பாட்டுக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.

அல் அஸ்ராக் வான்படைத்தளத்தில் இருந்த ஜோர்டான் வான்படையின் 3 எப்-16 விமானங்கள் அழிவடைந்துள்ளதாக மத்திய கிழக்கு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மேலும் சில ரேடார்களும் ட்ரோன்கள் மூலம் குறிவைக்கப்பட்டன, இருப்பினும் அவை உண்மையில் தாக்கப்பட்டன என்பது இன்னும் உறுதிப்படுத் தப்படவில்லை.

ஜோர்டானில் உள்ள ரேடார்களையும் தளத்தை ஈரான் குறிவைத்ததைத் தொடர்ந்து ட்ரம்ப் தனது தாக்குதல் திட்டத்தை மாற்றியமைத்தார்.ஈரானுடன் ஒர் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதால் தாக்குதலை நிறுத்துவதாக அறிவித்துள்ளார்.இந்த போரை பொறுத்தவரை ஈரான் அதிக இழப்பை சந்தித்தாலும் போரில் தற்போதைய நிலையில் வெற்றிபெற்றது ஈரான் தான். இரண்டு அணுவாயுத நாடுகளை எதிர்ப்பதில் வெற்றி கண்டுள்ளது.இந்தப் புள்ளிகளில் ஒரு உடன்பாடு எப்படி சாத்தியமாகும்என்பதே தற்போதைய கேள்வி?

இரண்டு அணுசக்தி நாடுகளால் தாக்கப்பட்ட ஒரு நாடு, தனது செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைக் கைவிடுவதா? இது ஒவ்வொரு ஈரானியராலும் கண்டிக்கப்படும் ஒரு நடவடிக்கையாக இருக்கும்.

ஈராக்கியப் போராளிக் குழுக்களைப் போலவே, தெஹ்ரானின் தந்திரோபாய உத்தரவுகளைப் பின்பற்றி, இஸ்ரேலுக்கு எதிராக ஒரு முனையைத் திறப்பதன் மூலம் ஹிஸ்புல்லா ஈரானுக்கு விசுவாசமாக இருந்தது. இன்று ஈரான் தனது பதிலிப் படைகளுக்கான ஆதரவை எப்படி விலக்கிக் கொள்ள முடியும்?

ஈரானிய ஏவுகணைகளைக் கட்டுப்படுத்துவது மற்றொரு சிக்கலான விடயம். இதை அறிவிக்கத் துணியும் எந்த வொரு ஈரானிய அரசாங்கமும் பதவியிலிருந்து அகற்றப்படும்.

முற்றிலும் சமாளிக்க முடியாத பல விடயங்களில் இவை வெறும் 3 மட்டுமே. இவற்றில் எப்படி முன்னேற்றம் காண்பது என்பதே தற்போதுள்ள சிக்கல். குறிப்பாக இஸ்ரேலுக்கு, இந்தப் புள்ளிகளில் முன்னேற்றம் இல்லாமல் செய்யப்படும் எந்தவொரு உடன்பாடும் ஒரு பெரும் தோல்வியாகவே இருக்கும். டிரம்பிற்கும் இது பொருந்தும்.

## இஸ்ரேல் தடுத்து ... தொடர்ச்சி...

மரணத்திற்கு வழிவகுத்தது. மனநிலை பிறழ்ந்த ஒரு கொடுங்கோலனின் வெறித்தனத்திற்கு ஒட்டுமொத்த மனிதகுலமும் விலை கொடுத்தது. இன்று, அதே தவறு மீண்டும் செய்யப்படுகிறது. காசாவின் கசாப்பு மன்னன் நெதன்யாகு மற்றும் அவரது அமைச்சரவையின் இனப்படுகொலைச் செயல்கள், ஒரு காலத்தில் ஹிட்லரை வரவேற்ற அதே மௌனத்துடனும் பதிலின்மையுடனும் பார்க்கப்படுகின்றன.

ஒரு நெருப்பு வளரும்போது, அது தொடங்கிய பகுதியை மட்டும் எரிப்பதில்லை; அதன் தீப்பொறிகள் உலகம் முழுவதும் பரவுகின்றன என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. ஹோர்முஸ் ஜலசந்தியில் தீர்க்கப்படாத சூழ்நிலைக்காக இன்று ஒட்டுமொத்த உலகமும் விலை கொடுப்பதைப் போலவே, இஸ்ரேலின் சட்டவிரோதச் செயல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படாவிட்டால், மனித குலம் முழுவதுமே இந்தப் பிராந்தியத்துடன் சேர்ந்து அதன் விளைவுகளைச் சந்திக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டிட்வா சூறாவளிக்கு ... தொடர்ச்சி...

இந்தத் திட்டம் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை 2026 ஏப்ரல் 6ஆம் திகதியன்று எடுத்த விசேட கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார். இதன்படி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 650 சதுர அடி பரப்பளவுள்ள புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்காக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். அத்துடன், தலா 10 பேர்ச் காணியும் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படும் என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

### லயன் குடியிருப்பாளர்களுக்கும் முழுமையான நட்டஈடு

மலையகத்தின் பாரம்பரிய லயன் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு வீட்டு உரிமையோ காணி உரிமையோ இல்லாத நிலை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்நிலையில், சொந்தக் காணி இல்லாத காரணத்தால் அவர்கள் நட்டஈடுகளை இழக்க நேரிடாது என அமைச்சர் உறுதியளித்தார். காணி உரிமை உள்ளவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களுக்குச் சமமாக, லயன் குடியிருப்பாளர்களுக்கும் 50 இலட்சம் ரூபாய் பெறும் உரிமை வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது மலையக மக்களின் வரலாற்று குறைகளை நிவர்த்தி செய்யும் முக்கியமான கொள்கை மாற்றமாகக் கருதப்படுகிறது. பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பல லயன் குடியிருப்புகள் 150 முதல் 200 ஆண்டுகள் வரையிலான பழமையான கட்டடங்களாகும். பல கட்டடங்கள் முழுமையாக இடிந்து விழாத போதிலும் வாழத் தகுதியற்ற நிலையில் இருப்பதாக நீண்டகாலமாகக் கூறப்பட்டு வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு, அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளால் வாழத் தகுதியற்றது என சான்றளிக்கும் குடியிருப்புகளுக்கு பழுது பார்க்கும் திட்டத்திற்கு பதிலாக புதிய வீடுகள் கட்டுவதற்காக நேரடியாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என அமைச்சர் அறிவித்தார். இது பல தலைமுறைகளாக நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. முழுமையாக சேதமடையாத வீடுகளுக்கும் நிவாரணத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்திப் பொறுப்பு நிதியம் மற்றும் பிரதேச செயலாளர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் 5 இலட்சம் முதல் 25 இலட்சம் ரூபாய் வரை நிதி உதவிகள் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். இதன் மூலம் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகளை மீளமைத்துக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமைச்சர் சமந்த வித்யாரத்ன தனது உரையில் வீடமைப்பை மட்டுமல்லாமல், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதார முன்னேற்றத்தையும் முக்கியமாக எடுத்துரைத்தார்.

சர்வதேச சந்தையில் நிலவும் கடுமையான போட்டி மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் நிலையில், பெருந்தோட்டத் துறையை கவனமாக நிர்வகிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அவர் கூறினார். இத்துறையின் வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத்துடனும், ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்துடனும் நேரடியாகப் பிணைந்துள்ளது என அவர் வலியுறுத்தினார்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதிய அரசாங்கம் வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பள உயர்வை வழங்கியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதன்படி, தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளம் 400 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. அதில் அரசாங்கம் தினசரி 200 ரூபாய் ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்குகிறது. மீதமுள்ள 200 ரூபாயை பெருந்தோட்ட நிறுவனங்கள் வழங்குகின்றன என்று அவர் எடுத்துரைத்தார். இந்த நடவடிக்கை தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவின அழுத்தத்தை ஓரளவு குறைக்கும் என அரசாங்கம் நம்புகிறது.

### காணி உரிமைகளை வழங்கும் புதிய கொள்கை

மலையக மக்களின் நீண்டகால கோரிக்கைகளில் முக்கியமானது காணி உரிமை தொடர்பானதாகும். முன்னர் நெடுங் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு 7 பேர்ச் காணி வழங்கும் திட்டம் இருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் அதனை 10 பேர்ச் வரை உயர்த்தியுள்ளது. மேலும், காணி உரிமப் பத்திரங்களை விரைவாக வழங்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச் சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

இது மலையக மக்களின் சமூக மற்றும் பொரு ளாதார பாதுகாப்பை வலுப்படுத்தும் நடவடிக்கையா கக் கருதப்படுகிறது. இதேவேளை, மலையக பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அழுத்தங்கள் குறித்து அண்மையில் சர்வதேச மனித உரிமை அமைப் பான சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்த விமர்சனங்களுக்கும் விடயத்து க்கு பொறுப்பான அமைச்சர் சமந்த வித்யாரத்ன பதிலளித் துள்ளார்.

இலங்கையின் பெருந்தோட்டத் துறையைப் பற்றிய சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் சில விமர்சனங்கள் முழுமையாக துல்லியமானவை அல்ல என அமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பாக விரிவான உண்மைத் தகவல்களை எதிர்காலத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார். டிட்வா சூறாவளி ஏற்படுத்திய பாதிப்புகள் ஒரு இயற்கை அனர்த்தத்தின் விளைவாக மட்டுமல்லாமல், மலையக மக்களின் பல தசாப்த கால சமூக மற்றும் பொரு ளாதார பலவீனங்களையும் வெளிப்படுத்தியுள்ளன.

வீடமைப்பு, காணி உரிமை, அடிப்படை உட்கட்ட மைப்பு, பாதுகாப்பான குடியிருப்புகள், தொழிலாளர் நலன் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் ஆகிய துறைகளில் இன்னும் பல சவால்கள் நிலவுகின்றன. அரசாங்கம் அறிவித்துள்ள 50 இலட்சம் ரூபாய் வீடமைப்பு திட்டம் மற்றும் காணி வழங்கும் திட்டங்கள் நடைமுறையில் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டால், அது மலையக மக்களின் வாழ்க் கையில் வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால் அறிவிப்புகள் மட்டுமே போதுமானதல்ல. அவை காலதாமத மின்றி, வெளிப்படையாக, அரசியல் தலையீடுகள் இன்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

டி.ட்வா சூறாவளி மலையக மக்களின் வாழ்க்கையில் ஆழமான காயங்களை ஏற்படுத்தியுள்ளது. பல குடும்பங்கள் இன்னும் தற்காலிக முகாம்களில் வாழ்கின்றன. பலர் நிரந்தர வீடுகளை இழந்துள்ளனர். பலர் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப போராடி வருகின்றனர். ஒருபுறம் எதிர்க்கட்சிகள் மீட்பு நடவடிக்கைகளின் மந்த நிலையை சுட்டிக்காட்டுகின்றன. மறுபுறம் அரசாங்கம் முன்னெப் போதும் இல்லாத அளவிலான வீடமைப்பு, காணி உரிமை மற்றும் நட்டஈடு திட்டங்களை அறிவித்துள்ளது. இந்த விவாதங்களின் மத்தியில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையும் தங்கியுள்ளது. அந்த மக்கள் பாதுகாப்பான வீடுகளிலும் நிலையான வாழ்வாதாரத்துடனும் மீண்டும் வாழத் தொடங்கும் வரை டிட்வா சூறாவளியின் கதை முடிவடையாது.

## வலி.வடக்கில் இருந்து ... தொடர்ச்சி...

யுத்தம் நிறைவடைந்து 17ஆண்டுகள் நிறை வடைந்த நிலையிலும் அப்பகுதி மக்கள் இன்னமும் மீள் குடியேற அனுமதிக்காது, அப்பகுதி மக்களின் காணிகளில் இராணு வத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இந்நிலையில் தமது காணிகளில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி , தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும் என திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகம் முன்பாக போராட் டத்தை முன்னெடுக்க உள்ளதாக, மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக்குழு அறிவித்துள்ளது.

தமது போராட்டத்திற்கு கட்சி பேதங்கள் இன்றி , அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராட்டத் தில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குச்சவெளி பவளக்குள ... தொடர்ச்சி...

சங்க பிரதிநிதிகள் கூட்டாக தெரிவிக்கையில், நாங்கள் குடி நீரின்றி தவிக்கிறோம் பாடசாலை செல்லும் பிள்ளைகள் பெண்கள் என பலரும் கஷ்டங்களை இதன் மூலம் எதிர்நோக்குகிறார்கள்.

குச்சவெளி பிரதேச சபை மூலமாக குடி நீர் விநியோகம் செய்வதற்காக நிதி விடுவிக்கப்பட்ட போதிலும் இரு மாதங்களாக நீர் விநியோகிக்கவில்லை. ஓரிரு வாரங்களுக்குள் குடி நீர் பிரச்சினையை தீர்க்காவிட்டால் பிரதேச செயலகம்,பிரதேச சபையை முற்றுகையிடுவோம் எனவும் தெரிவித்தனர்..

## பயங்கரவாத தடைச் ... தொடர்ச்சி...

தடுப்புக் காவலில் வைத்து வருகின்றமை குறித்து உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கே இக்கடிதம் எழுதப்படுகிறது” என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இச்சட்டம் நீக்கப்படும் வரை அதனைப் பயன்படுத்துவதில்லை என்ற இடைக்காலத் தடைக்கான உறுதியையும் அரசாங்கம் வழங்கியிருந்ததாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“இந்தச் சட்டத்தினால் ஏதோ ஒரு வகையில் தடைசெய்யப்பட்ட ஒரு பாடலைப் பாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், 24 வயதுடைய சொல்லிசைப் கலைஞர் கணேஸ்குமார் சங்கீத்சன் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்”.

“கடந்த காலங்களில் நீங்கள் பலமுறை செய்தது போல, இந்த விவகாரத்தை இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லுமாறும், அவர்கள் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றி, இந்த கொடூரமான சட்டத்தை தாமதமின்றி நீக்குமாறு வலியுறுத்துமாறும் நாங்கள் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்” என்று தமிழரசு கட்சி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.





## ஈஸ்ரர் தாக்குதல்... தொடர்ச்சி...

கொழும்பை முழுமையாகப் பகைத்துக் கொள்ளாமல் அவை அரவணைத்துச் செல்கின்றன.

அதாவது, இலங்கையைச் செல்லப் பிள்ளையாகக் கருதி விட்டுக் கொடுத்து அணுகும் போக்கை கையாளுகின்றன. ஆகவே, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தொடர்ந்தும் பாரம்பரிய நாடாளுமன்ற தேர்தலில் மாத்திரம் ஈடுபடும் முறைமை என்பது அர்த்தமற்ற தற்காலிக சலுகைகளுக்கு உதவுமே தவிர, ஈழத்தமிழர்களின் நிரந்தர இறையாண்மைக்கு ஏற்ற தீர்வைத் தராது.

மேலும், சர்வதேச சட்டப் பொறிமுறை நோக்கி நகர்தல் (International Legal Recourse) தற்போதைய அரசியலில் சூழலில் முக்கியமாகிறது.

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் தீர்வைத் தேடுவதை விடுத்து, ஐநா மனித உரிமைச் சபை - சர்வதேச நீதிமன்றம் ஊடாக 'இன அழிப்பு நீதி' மற்றும் 'பொறுப்புக்கூறலை' தமிழ்த் தேசியக் கட்சிகள் அழுத்தம் திருத்தமாக ஒருமித்த குரலில் கோர வேண்டும்.

உலகெங்கும் உள்ள புலம்பெயர் தமிழ் சமூகத்தின் அறிவு, நிதி, அரசியல் செல்வாக்கு ஆகியவற்றை ஒருங்கி ணைத்து, யூதர்களின் 'சியோனிச' கட்டமைப்பு போல பலமிக்கதொரு உலகளாவிய தமிழ் இராஜதந்திர அமைப்பை உருவாக்க வேண்டும்.

இதன் மூலம் வல்லரசு நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளில் நேரடிச் செல்வாக்குச் செலுத்த முடியும். "சுயநிர்ணய உரிமை' என்பது தமிழர்களின் அடிப்படை நியாயம் என்பதை ஆணித்தரமாக நிலைநிறுத்த வேண்டும்.

அத்துடன், தேர்தல் அரசியலைக் கடந்து, வடக்கு-கிழக்கு தாயகப் பிரதேசத்தில் புலம்பெயர் முதலீடுகள் மூலம் தற்சார்புப் பொருளாதாரத்தை உருவாக்குதலும், நில ஆக்கிரமிப்பு மற்றும் கலாசாரச் சிதைப்புகளுக்கு எதிரான சிவில் சமூகப் போராட்டங்களை சர்வதேச ஜன நாயகக் கருத்தியலின் உள்ளடக்கத்தில் சேர்ப்பதும் மிக அவசியமாகும்.

• • •

## இயக்குநர் இமயம் ... தொடர்ச்சி...

-போதும் உதிர்த்த "என் இனிய தமிழ் மக்களே" என்ற அந்த சொற்கள் காலத்தைக் கடந்து வாழக்கூடியவை. அது வெறும் மேடைப்பேச்சிற்கான தொடக்க உரை அல்ல; மாறாக, உலகெங்கும் வாழும் ஒட்டுமொத்தத் தமிழர்களையும் ஒரே புள்ளியில் இணைத்த ஒளிரும் அன்புப் பாலம். வரும் தலைமுறையினர் அவரது திரைப்படங்களை நேரடியாகத் திரையரங்குகளில் பார்க்கும் வாய்ப்பை இழந்திருக்கலாம், ஆனால் இந்த ஒற்றை வரி அவர்களின் காதுகளில் ஒலிக்கும்போதெல்லாம்—மண்ணின் மீதான பற்று, எளிய மனிதர்களுக்கான கலை, மற்றும் எல்லைகள் கடந்த தமிழ் நட்புறவு ஆகிய பாரதிராஜாவின் ஒட்டுமொத்த வாழ்க்கைப் பாடமும் அவர்களுக்குள் புதிய வீரியத்துடன் உயிர்த்தெழும். இயக்குநர் இமயம் மறைந்திருக்கலாம், ஆனால் அவர் விதைத்துச் சென்ற இந்த அன்பு முழக்கம், இனிவரும் தலைமுறைகளுக்கும் தமிழினத்தின் அடையாளத்தை முன்னோக்கி எடுத்துச்செல்லும் ஒளியாக என்றென்றும் வழிகாட்டும்.

• • •

## பின்லாந்தில் ஒரு... தொடர்ச்சி...

நிரந்தரமாக செயல்படும் இராணுவ அமைப்பை உருவாக்குவதைப் பற்றியது. பின்லாந்தும் சுவீடனும் நேட்டோவில் இணைந்த பிறகு, பால்டிக் கடல் மற்றும் ஆர்டிக் பகுதிகள் அந்த அமைப்பின் இராணுவத் திட்டமிடலின் முக்கிய திசைகளில் ஒன்றாக மாறியுள்ளன.

## தமிழர்கள் கொல்லப்பட்ட... தொடர்ச்சி...

வில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'மன்னார் மாவட்ட ஆயராக இருந்த இராயப்பு ஜோசப் வெளிப்படையாக இனவழிப்பு என்று தெரிவித்திருந்தார்". ஆனால் அதற்கான நீதியை கோருவதற்கு கத்தோலிக்க சபை தயாராக இல்லை என்றும் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் முன்வைத்த கருத்தை தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும் எஸ்.சிறீதரன் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

## போராட்டங்களும் ... தொடர்ச்சி...

விடுவிக்கப்படவேண்டும் என்ற கோணத்தில் இவர்களது சகல நடவடிக்கைகளும் அமைந்துள்ளது.

ஆகவே இந்த தாக்குதல் சம்பந்தமான விசாரணைகள் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் உண்மையானவர்கள் கைது செய்யப்பட வேண்டும். மக்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும்.

எனவே இந்த அரசாங்கம் இதனை தெட்டத் தெளிவாக செய்து முடிக்கவேண்டும் அவர்களும் ஏனைய அரசாங்கங்களை போல் விசாரணைகளை கிடப்பில் போடுவதற்கோ இழுத்தடிக்கும் நிலைக்கோ கொண்டு செல்லாது விரைவாக விசாரணைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்பது தான் எங்களின் நிலைப்பாடு என்றார்.

## ஐரோப்பிய ஒன்றியத்திற்கு... தொடர்ச்சி...

இலங்கையின் கிழக்கு மாகாண தமிழர்களின் தனித்துவமான அடையாளங்கள் முற்றாக அழிந்து போகாமல் தடுக்கப்பட வேண்டும். இதற்குப் பாடசாலைக் கலைத்திட்டங்களில் கிழக்கின் பாரம்பரியக் கலைகளைச் சேர்த்தல், கலைஞர்களைக் கௌரவித்து வாழ்வாதாரத்தை உறுதி செய்தல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மூலம் இவற்றை ஆவணப்படுத்துதல் போன்ற அவசரக் கால நடவடிக்கைகள் அவசியமாகும். வேர்களைப் பாதுகாத்தால் மட்டுமே கிழக்குத் தமிழ்ச் சமூகம் தனது சுய அடையாளத்துடன் நிமிர்ந்து நிற்க முடியும்.

கிழக்கின் வரலாறு என்பது அந்த மக்களின் கிராமிய வழிபாட்டு முறைகளும் அதில் தங்கியுள்ள கலைகலாசார வழிபாட்டு முறைகளும் முக்கியமானதாக மட்டுமல்ல அந்த சமூகத்தின் வரலாற்றினையும் கொண்டதாகவே காணப்படுகின்றது.அதில் முன்னெடுக்கப்படும் மாற்றம் என்பது அந்த சமூகத்தின் வரலாற்றினை மாற்றுவதற்கு சமமாகவே நோக்கப்படவேண்டும்.

எனவே இது தொடர்பில் அனைவரும் உணர்ந்து எதிர்காலத்தில் கிழக்கின் பாரம்பரியத்தினையும் பண்பாட்டினையும் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அழிந்து செல்லும் எமது வரலாறுகள் என்பது கிழக்கின் இருப்புக்கான ஆபத்தாக மாறும் நிலையே ஏற்படும்.

• • •

## ஐரோப்பிய ஒன்றியத்திற்கு... தொடர்ச்சி...

பழக்கமாக மாற்ற முடியும்.

உலகத் தொழிற்சாலையுடன் சண்டைக்குப் போய்விட்டு, அந்தத் தொழிற்சாலை உங்கள் விநியோகச் சங்கிலியைச் சோதிக்கும்போது அழாதீர்கள் என அது மேலும் தெரிவித்துள்ளது.

ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றியம் முன்மொழிந்துள்ள சமீபத்திய தடைகள் தொகுப்பில், இந்தியா மற்றும் சீனாவைத் தளமாகக் கொண்ட நிறுவனங்களும் அடங்கியிருப்பதை தொடர்ந்து சீனா இந்த கடும் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

## வரையறையற்ற சட்டமும் ... தொடர்ச்சி...

வேண்டிய சூழலில், பிரதான தமிழ் கட்சிக்குள் நிலவும் இந்த அதிகாரப் போட்டி அரசாங்கத்திற்குச் சாதகமான சூழலையே ஏற்படுத்திக் கொடுக்கிறது.

அதன் விளைவாகவே சட்ட ரீதியாக பிணையில் விடுவிக்கப்பட்ட சங்கீதச்னை தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அழைத்துச் செல்லும் துரதிஷ்ட வசமான நிலைமை காணப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டம் என்பது இலங்கையின் ஜனநாயக அமைப்பிற்கு ஏற்பட்டுள்ள ஒரு புற்றுநோய் போன்றதாகும். பாடகர் சங்கீதசனின் விவகாரம் கலைச் சுதந்திரத்தையும், சுரேஷ் சாலேயின் விவகாரம் அதிகார வர்க்கத்தின் வீழ்ச்சியையும், சுமந்திரன் - சிறிதரன் மோதல் தமிழ் அரசியலின் பலவீனத்தையும் ஒரே புள்ளியில் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

அரசாங்கம் இன்னும் இரு மாதங்களில் பழைய சட்டத்தை நீக்கிவிட்டு, அதைவிடக் கொடிய புதிய சட்டத்தைக் கொண்டுவர முற்படுவது பழைய மதுவைப் புதிய மொந்தையில் ஊற்றுவதற்கு ஒப்பானது.

பயங்கரவாதம் என்பதற்கான சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தெளிவான வரையறை உருவாக்கப்படாத வரை, இலங்கையில் கலைஞர்களும், ஊடகவியலாளர்களும், அரசியல் எதிர்ப்பாளர்களும் தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளேயே வாழ்வர்.

எனவே, வெறும் சட்ட மாற்றங்கள் மட்டுமன்றி, ஒட்டுமொத்த அரசியல் சிந்தனையிலும், மனித உரிமை மதிப்பீட்டிலும் தீவிர மாற்றம் ஏற்படாவிடில் இலங்கை சர்வதேச அரங்கில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்ப முடியாது.

• • •







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .


இ.ஜோயல்
செல்வநாயகபுரம்

## காலநிலை மாற்றத்தை தடுப்போம்

காலநிலை மாற்றம் என்பது 21-ம் நூற்றாண்டின் விஞ்ஞான உலகின் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. தொழிற்சாலைகளின் வளர்ச்சி, புதைபடிவ எரிபொருள் பயன்பாடு, காடுகள் அழிப்பு, அதிக கழிவுகள் காரணமாக வளிமண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடு போன்ற பச்சை வீட்டு வாயுக்கள் அதிகரித்து பூமி வேகமாக வெப்பமடைகிறது. இதனால் உலகம் முழுவதும் பல மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன.

இந்த காலநிலை மாற்றத்தின் முக்கிய விளைவுகளை பார்ப்போம். துருவ பனிப்பாறைகள் வேகமாக உருகி கடல் மட்டம் உயர்கிறது. இதனால் தரைப்பகுதிகள் மூழ்கும் அபாய நிலைமையும் உருவாகியுள்ளது. பருவமழை தவறி போவதால் ஒரு பக்கம் வறட்சியும், மறுபக்கம் எதிர்பாராத வெள்ளமும் வருகிறது. சூறாவளி, வெப்ப அலை போன்ற பேரிடர்கள் அடிக்கடி நிகழ்கின்றன. விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு உணவு உற்பத்தி குறைகிறது. இதனால் உணவுப் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு ஏற்படுகிறது. மனிதர்களுக்கு சுவாச நோய், தோல் நோய், வெப்ப சோர்வு போன்ற புதிய உடல்நல பிரச்சினைகள் வருகின்றன. உயிரினங்களின் வாழ்விடம் அழிந்து பல உயிர்கள் அழியும் அபாயத்தில் உள்ளன.

இப்போது வரப்போகும் எல்நினோ நிகழ்வு இந்த பிரச்சினையை இன்னும் தீவிரமாக்கும். எல்நினோ காலத்தில் பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு நீர் வழக்கத்தை விட வெப்பமாகிறது. இதனால் பருவமழை குறைந்து வறட்சி ஏற்பட வாய்ப்புள்ளது. வெப்பம் அதிகமாகி வெப்ப அலை நாளுக்கு நாள் அதிகரிக்கும். மேலும் இந்தமுறை எப்பொழுதும் இல்லாதவாறு எல்நினோ தாக்கம் அதிகமாக இருக்கும் என ஐநா , உலக நாடுகளுக்கு அறிவித்துள்ளது.

ஆகையால் இதை தடுக்க நாம் உடனே செயல்பட வேண்டும். மரம் நடுதல் மிக முக்கியம். ஏனெனில் மரங்கள் கார்பனை உறிஞ்சுகின்றன. இதனால் சூழலில் வெப்பம் குறைக்கப்படும். சூரிய ஒளி, காற்று போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாற வேண்டும். பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்து 3R முறை - Reduce, Reuse, Recycle பின்பற்ற வேண்டும். பொது போக்குவரத்து, சைக்கிள் பயன்படுத்தி வாகன புகையை குறைக்கலாம். தேவையில்லாமல் மின்சாரத்தை வீணாக்க கூடாது. நீரை சிக்கனமாக பயன்படுத்தி மழைநீர் சேகரிப்பு செய்ய வேண்டும்.

இதனை தொகுத்து நோக்குமிடத்து இந்த புவியானது நமக்கு கிடைத்த ஒரே வீடு. அரசாங்கம் மட்டும் இல்லாமல் ஒவ்வொரு தனிமனிதனும் பொறுப்புடன் நடந்து கொண்டால் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தலாம். வாருங்கள், நம் எதிர்கால சந்ததியினருக்காக புவியை பாதுகாப்போம்.

**சு.திகழினி**
**கன்னியா**


சி.கிருத்திகா
3 ஆம் கட்டை

## இயற்கை அன்னை

பசுமை போர்த்திய பாரினில்
எங்கும்,
பறந்து திரியும் பறவையின்
கீதம்!
கசிந்து உருகும் மேகத்தின்
தாகம்,
காண்பவர் நெஞ்சில்
களிப்பினை
ஊட்டும்!
சிசுவின் புன்னகை சிந்தும்
மலர்கள்,
சிரித்து நம்மை வரவேற்பது
போல,
திசைகள் எட்டிலும்
நற்காட்சி தந்து,



திகட்டாத பேரின்பம் ஊட்டுதே
இயற்கை!

மலைமகள் தந்த அருவியின்
வீழ்ச்சி,
மண்ணில் பாய்ந்து வளமுடன்
சேர்க்கும்!
அலைமகள் பாடும் கடலலை
ஓசை,
அகத்தின் துயரை ஆற்றியே
வைக்கும்!
நிமிர்ந்து நிற்கும் மரங்களின்
கூட்டம்,
தவமிருக்கும் முனிவர் போல்
தோன்றும்!
விலைமதிப்பில்லா இக்காற்று
தந்து,
உயிர்களைக் காக்கும்
அன்னையே
இயற்கை!

**மு.சந்தியா**
**செல்வநாயகபுரம்**



# தாயகமும் வாழ்வும்



